தமிழ் முரசு

ஆசிரியர்: ம.பொ.சிவஞானம்.



1950 - செப்டம்பர்

விலை 4 அணா

தமிழ் முரசு

திருவள்ளுவராண்டு 1981 ஆவணி

காங்கிரஸ் தேர்தல்கள்

இந்தியாவெங்கும் காங்கிரஸ் கமிட்டித் தேர்தல்கள் அநேகமாக முடிந்து விட்டன. இந்தத் தேர்தல்களில் கடந்த ஐம்பதாண்டுகளில் காணமுடியாத போட்டியை— இல்லை - போராட்டத்தைக் கண்டோம். சட்ட ரீதியாக, அதிகாரமும்-அலவன்சும் பெறக் கூடிய சட்ட சபைத்தேர்தலில் கூட இவ்வளவு போட்டியும் போராட்டமும் இருந்ததில்லை. போட்டியிருந்த தொகுதிகள் சிலவற்றில், காங்கிரசின் பெருமையைக் குறைக்கும் வகையில் பேயாட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன.

என்றாலும், ஒன்றிரண்டு இடங்களில் தவிர பொதுவாக தேசம் முழுவதும் போலீசின் உதவியையோ, ராணுவத்தின் ஆதரவையோ நாடாமல் தேர்தல் நடந்து முடிந்திருப்பது பாராட்டத்தக்கது. காங்கிரசிலுள்ள "நல்ல சக்திகள்" இன்னும் முற்றும் அழிந்து விடவில்லை; புதிதாகத் தோன்றியுள்ள தீய சக்திகளின் கொடுமையைக் குறைக்கும் அளவுக்கு அவை ஆற்றல் பெற்றிருக்கின்றன என்பதைத் தேர்தல் முடிவு தெரிவித்து விட்டது. ஒரு ஜனநாயக ஸ்தாபனம் எந்த முறையில் அமைக்கப்பட வேண்டுமென்பதற்கு காங்கிரஸ் ஒரு வழி காட்டியாகும். தேர்தலுக்கே முகங் காட்டாத "ஆயுள் தலைவர்"களின் ஆதிக்கத்தின் கீழ் வளர்ந்து வரும் கட்சிகள் இதைக் கவனிக்க வேண்டும்.

இன்றைய காங்கிரஸ், சிறைச்சாலைக்கு வழி காட்டும் போராட்ட ஸ்தாபனமன்று: பட்டம், பதவி, செல்வம், செல்வாக்கு ஆகியவற்றில் எதுவேண்டுமானாலும் தரக்கூடிய

ஆற்றல் இன்றைய காங்கிரசுக்கு இருக்கிறது. கேட்டதை யெல்லாம் தரும் 'காமதேனு' என்பார்களே, அந்தக் காம தேனுவின் நிலையில் இன்றைய காங்கிரஸ் இருக்கிறது. அதனுற்றுன், தன்னலக்காரர்களும், பதவி வேட்டை யாளர்களும் காங்கிரசைக் கைப்பற்ற முயலுகின்றனர்.

"ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிகளுக்குக் கொண் டாட்டம்" என்பது பழமொழி. அதுபோலவே, உண்மை யான காங்கிரஸ் வாதிகளிடையே ஏற்பட்டுள்ள பிளவு சந்தர்ப்பவாதிகளுக்குச் சாதகமாகி விட்டது. காங்கிரசுக் குள்ளேயே குழுவேற்றுமைகள் தோன்றியுள்ளன. குழுக் களின் தலைவர்கள் நெடுநாளைய தேசபக்தர்கள்; விடுதலைப் போரில் ஈடுபட்டு வேதனை பல அடைந்தவர்கள். ஆனல், இந்தக் குழுக்களில் அங்கம் பெற்றுள்ளவர்களில் பலரை அப்படிச் சொல்லுவதற்கில்லை. இவர்கள் சந்தர்ப்ப வாதி கள்; மாஜி ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள்; வாழ்நாள் முழு வதும் பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பல்லாண்டு பாடியவர்கள். காங்கிரஸ்காரர்கள் யுத்த எதிர்ப்பில் ஈடுபட்டிருந்த காலத் தில், இந்த ஆசாமிகள் யுத்த நிதிக்குப் பணம் திரட்டிக் கொண்டிருந்தவர்கள். காங்கிரஸ் சட்டசபையைப் பகிஷ் கரித்த காலத்தில், இந்தப் பேர்வழிகள் சட்டசபையில் அமர்ந்து ஆளுவோர் சொற்படி ஆட்டம் போட்டவர்கள். காங்கிரஸ்காரர்கள் சொத்து சுகங்களைத் துறந்து சிறையில் சிப்பி ஏந்தி சீரழிந்த காலத்தில், இவர்கள் பஞ்ச மகா பாத கங்களையும் அஞ்சாமல் செய்து பணம் திரட்டிக் கொண் டிருந்தவர்கள். இன்று காங்கிரசுக்கு சரியான ஒரு எதிர்க் கட்சி இருந்தால், இந்த சந்தர்ப்பவாதிகள் அந்த எதிர்க் கட்சியின் துணை கொண்டு காங்கிரசை அழிக்க முனைந் திருப்பார்கள். ஆனல், காங்கிரசுக்கு எதிர்க்கட்சி இல்லை; அல்லது இருக்கும் 'எதிர்க்கட்சி'களுக்கு நாட்டில் செல் வாக்கில்லை. காங்கிரசைத் திட்டுவதில் அவை வல்லமை பெற்றிருக்கின்றனவே யொழிய, காங்கிரசுக்கு எதிராக மக்களைத் திரட்டுவதில் வல்லமை பெற்றிருக்கவில்லை. ஆகவே, எதிர்க்கட்சிகள் உருவாகும் வரை இந்த சந்தர்ப்ப வாதிகள் தங்கள் சுயநலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள காங்கிரசில் இடம்பெற விரும்புகிறார்கள். உண்மை காங்கிரஸ் வாதிகள் இவர்களை விரட்டியடிக்க ஒன்றுபட வேண்டும்.

காங்கிரஸ் கமிட்டிகளுக்கு புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பவர்களின் பொறுப்பு மகத்தானது. தேச

மக்கள் - காங்கிரசை விரும்புவோரும் சரி; வெறுப்போரும் சரி -- காங்கிரஸ் செல்வாக்கின் நிழலில்தான் வசிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு காங்கிரஸ் வாதியும் தமது கடமையைச் சரிவரச் செய்யவேண்டும். பார்லிமெண்டரி ரீதியாக, மாகாண சட்ட சபைகளிலும் சரி; மத்திய பார்லிமெண்டிலும் சரி; காங்கிரசுக்கு 'எதிர்க் கட்சி' என்று சொல்லத் தக்க நிலையில் ஒரு கட்சியும் இல்லை. பாராளும் மன்றங்களுக்கு வெளியேயுள்ள 'எதிர்க்கட்சி'களின் போக்கைக் கவனிக்கும் பொழுது அடுத்த தேர்தலுக்குப் பிறகும் மாகாண, மத்திய பாராளு மன்றங்களில் ஒரு சரியான எதிர்க்கட்சி அமையும் என்றும் நம்புவதற்கில்லை. இதனால் சட்டப்படியும் சந்தர்ப்பத்தையொட்டியும் அங்கிங்கு எனாதபடி இந்தியா எங்கும் காங்கிரஸ் ஒன்றே ஏக கட்சியாக இருந்து வருகின்றது. ஆகவே, எதிர்க்கட்சியின் பொறுப்பையும் காங்கிரஸ் கமிட்டிகளே ஏற்கவேண்டும். ஆம்; ஆளுவோருக்கு ஆதரவு காட்டுவது மட்டுமல்லாமல், ஆளப்படும் மக்களுக்காகப் பரிந்து பேசும் கடமையும் காங்கிரஸ் கமிட்டிகள் மீது சுமந்து நிற்கிறது. இந்தக் கடமையை நிறைவேற்றுவதைப் பொறுத்ததுதான் காங்கிரசின் எதிர் கால வாழ்வு.

காங்கிரஸ் வாதிகளே! ஆளுவது மட்டும் நமது கடமையல்ல; ஆளப்படும் மக்களுக்கு ஆதரவு காட்டுவதும் நமது கடமையாகும். இதை மறந்து விடக்கூடாது.

மாகாணத்தைப் பொறுத்த வரையில் 'காங்கிரஸ் ஆட்சி' என்று சொல்லப்படுவதெல்லாம் பன்னிரண்டு காங்கிரஸ்காரர்கள் அமைச்சர்களாயிருப்பதைக் கொண்டு தான். அமைச்சர்களைத் தவிர, அரசாங்க யந்திரத்தின் இதர அங்கங்கள் அனைத்தும் ஆங்கிலேய ஆட்சியில் சிருஷ்டிக்கப் பட்டவையே யாகும். ஆம்; ஏகாதிபத்தியத்திற்கு சாதகமாகவும், காங்கிரசுக்குப் பாதகமாகவும் இருந்து பழக்கப்பட்டவர்கள்தான் இன்றைய காங்கிரஸ் அரசாங்கத்தின் அதிகாரிகளாக இருந்து வருகின்றனர்!

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் மதுக்கடை மறியலுக்கு விரோதமாக இருந்த அதே அதிகாரிகள் இன்று மதுவிலக்குச் சட்டத்தின் காவலர்களாக இருக்கின்றனர்!

நடந்த காலத்தில் காங்கிரசைச் சீரழிக்கப் பாடுபட்ட - காங்கிரஸ் திட்டங்களைச் செயலாற்றவிடாமல் தடுத்த அதே

அதிகாரிகளைக் கொண்டுதான் இன்றைய காங்கிரஸ் ஆட்சியின் செல்வாக்கைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. தவிர்க்க முடியாத இந்த சங்கடத்தில் காங்கிரஸ் ஆட்சி சிக்கியிருக்கிறது. எனவே, காங்கிரஸ் பார்லிமென்டரி கட்சிக்கு அப்பாற்பட்டதாக உள்ள காங்கிரஸ் கமிட்டிகள் சற்று விழிப்புடன் வேலை செய்ய வேண்டும். அமைச்சர்கள் காங்கிரஸ்காரர்கள் என்பதற்காக அதிகாரிகள் தவறாக நடக்கமாட்டார்கள் என்று நம்புவதோ, அல்லது அவர்களுடைய தவறுகளுக்கு காங்கிரஸ் கமிட்டிகள் ஆதரவு காட்டவேண்டுமென்று விரும்புவதோ கூடாது. அதிகாரிகளின் தவறுகளை அமைச்சர்களின் கவனத்துக்குக் கொண்டு செல்லும் பொறுப்பை காங்கிரஸ் கமிட்டிகள் மேற்கொள்ள வேண்டும்.

அதிகார 'வாடை' வீசும் அரசாங்கக் கோட்டைக்குள் சிக்கியுள்ள காங்கிரஸ் பார்லிமெண்டரி வாதிகளைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பும் காங்கிரஸ் கமிட்டிகளுக்கு உண்டு. இந்தப் பொறுப்பை விருப்பு வெறுப்பின்றியும் நிறைவேற்ற வேண்டும்.

'முரசு' அச்சு யந்திரத்துக்குப் போகும் தருவாயில் தமிழ் மாகாணக் காங்கிரசுக்கு திரு. காமராஜரே மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி கிடைத்திருக்கிறது. எதிர்ப்பு பலமாக இருந்தும் பெருவாரியான வாக்குகளால் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். காங்கிரஸ் விதிப்படி அடுத்த மூன்றாண்டுகளுக்கு அவரே தலைவராக இருந்து வருவார். திரு. காமராஜர் தமக்குக் கிடைத்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தில் உண்மைக் காங்கிரஸ்வாதிகளிடையே உள்ள வேற்றுமைகளைப் போக்கப் பாடுபடுவாரென்று நம்புகிறோம். மழைகாலக் காளான்கள் போன்று காங்கிரசில் புகுந்துள்ள சந்தர்ப்ப வாதிகளை வெளியேற்றுவதிலும் அவர் கண்டிப்பாக நடந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம். அவருக்கு நமது பாராட்டுகள்.

அறப்போர் ஒன்றே வழி!

புதுவை, காரைக்கால் இரண்டும் பிரெஞ்சுப் பேரரசுக்கு அடிமைப் பட்டுள்ள தமிழ்ப் பிரதேசங்களாகும். இந்தப் பிரதேசங்களை இந்தியாவோடு இணைத்து விடவேண்டுமென்று அங்குள்ள மக்கள் கிளர்ச்சி செய்கின்றனர். புதுவையும், காரைக்காலும் இந்தியாவோடு இணைவதென்றால் தமிழகத்

தோடு இணைவதென்றே பொருள். அங்கு வாழும் மக்களில் அநேகமாக நூற்றுக்கு நூறு பேர் தமிழர்கள். ஆகவே, சிதறுண்டு கிடக்கும் தமிழகத்தை ஐக்கியப் படுத்தி தமிழரசு காணும் முயற்சியில் பிரெஞ்சுத் தமிழர்களின் கிளர்ச்சி ஒரு பகுதியேயாகும்.

பிரெஞ்சுத் தமிழகம் இந்தியாவோடு இணைவதா? அல்லது இப்போதிருக்கும் அடிமை நிலையிலேயே இருப்பதா? என்பது பற்றி வோட்டெடுக்கப் போவதாக அறிகிறோம். இந்த வோட்டெடுப்பு நாடகத்தை நாம் ஒப்புக் கொள்வதற்கில்லை. ஒன்று, பிரெஞ்சுப் பேரரசு தமிழ்ப் பிரதேசங்களைவிட்டு வோட்டெடுப்பின்றியே வெளியேற வேண்டும். அல்லது, அதை வெளியேற்றுவதற்கான நேரடி நடவடிக்கையை டில்லி அரசினர் மேற்கொள்ள வேண்டும்.

மீண்டும் ஒரு உலக யுத்தம் நம்மை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. அப்படி யுத்தம் நேருமாயின், இந்தியா எந்தக் கட்சியிலிருக்கும்? பிரெஞ்சுப் பேரரசு எந்தக் கட்சியிலிருக்கும் என்பதை இப்போது நிச்சயிப்பதற்கில்லை. ஒரு வேளை, பிரெஞ்சுப் பேரரசு இந்தியா ஆதரிக்கும் கட்சிக்கு எதிர்க் கட்சியில் இருக்குமாயின், புதுவையும் காரைக்காலும் இந்தியாவிற்கு அன்னியப் பிரதேசங்களாக மட்டுமல்லாமல், அபாயப் பிரதேசங்களாகவும் இருக்க நேரிடலாம். ஆகவே, சுதந்திர உணர்ச்சிக்காக மட்டுமல்லாமல், சர்வதேச நிலைமைக்காகவும் பிரெஞ்சுத் தமிழகத்தை மீட்க வேண்டியது அவசியமும் அவசரமுமான கடமையாகும்.

ஆனால், டில்லி அரசினரின் போக்கு திருப்திகரமாயில்லை. தென்னிந்தியாவின் உள்நாட்டுப் பிரச்னைகள் எதிலும் அலட்சியமாக இருப்பது மேலிடத்தாருக்கு வழக்கமாகி விட்டது. ஆகவே, பிரெஞ்சு வங்கப் பிரதேசமாகிய சந்திரநாகூர்விஷயத்தில் காட்டிய அக்கறையும் அவசரமும் பிரெஞ்சுத் தமிழகத்தில் காட்டவில்லை. டில்லி ஆட்சியினரின் அலட்சியப் போக்கால் பிரெஞ்சுத் தமிழக மக்களின் அன்றாட வாழ்வுக்கே அபாயம் விளைந்துள்ளது. கொலையும், கொள்ளையும் புதுவை - காரைக்காலில் சகஜமாகி வருகின்றன. அடிமைத்தனத்தைக் கூடப் பொறுத்துக் கொள்ளலாம், ஆனால், அங்கு நடக்கும் பயங்கரக் கொடுமைகளைப் பொறுத்துக் கொள்ள முடியாது.

பிரெஞ்சு தமிழகத்தலைவர்கள் தங்கள் கிளர்ச்சியை புது முறையில் மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். காந்திய முறைப்படி சத்தியாக்கிரகத்தைத் துவக்க வேண்டும். அதைத் துவக்குமுன் இந்தியத் தமிழகத்தின் ஆதரவைப் பெற பிரசாரம் நடத்த வேண்டும். பிரெஞ்சுத் தமிழகத்தில் அறப்போர் துவங்குங்கால், இந்தியத் தமிழகத்திலிருந்து காந்தியப் படை அணி அணியாக பிரெஞ்சுத் தமிழகத்தை நோக்கிப் புறப்படவும் வழிசெய்யவேண்டும். பிரெஞ்சுத் தமிழகம் விடுதலை பெற இது ஒன்றே வழி.

நாட்டு நடப்பு

"ஒப்பந்தம்" ஒழிந்தது !

திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவருக்கும் கேரள யூனியன் பிரதமருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தைத் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் நிராகரித்து விட்டது. தலைவர் நத்தானியலும் ஒப்பந்தத்தின் கர்த்தாக்களில் ஒருவரான திரு. நேசமணியும் தங்கள் சக்தி முழுவதையும் பயன்படுத்திப் பார்த்தும் ஒப்பந்தத்துக்கு உயிரளிக்க முடியவில்லை. பொது மக்களின் ஆத்திரமும், இளைஞர்களின் எதிர்ப்பும் ஒப்பந்தத்தை ஆழக் குழி தோண்டிப் புதைத்து விட்டன. ஒப்பந்தத்தை நிராகரித்த தி. த. காங்கிரஸ் உறுப்பினர்களை நாம் மனமாரப் பாராட்டுகிறோம். அவர்களது தெளிந்த அரசியல் ஞானத்தைப் போற்றுகிறோம்.

திருவிதாங்கூர் தமிழகம், தாய்த் தமிழகத்தோடு சேருவதைத்தவிர வேறு எந்தவிதமான சலுகைகளையும் ஏற்கத் தயாரில்லை என்பதை தி. த. காங்கிரஸ் மற்றொரு முறையும் புலப்படுத்தி விட்டது. தி. த. காங்கிரசின் முன்னுள்ள பிரச்னை யாது? மலையாளிகளிடம் உறவு கொள்வது அல்ல; தாய்த் தமிழகத்தோடு ஒன்று படுவதேயாகும். ஒப்பந்தத்திற்கேற்பட்ட கதியைக் கண்ட பிறகேனும், மலையாளத் தலைவர்கள் இந்த உண்மையைப் புரிந்து கொள்வார்களாக!

ஒப்பந்தத்தை நிராகரித்து விட்டதோடு தி. த. காங்கிரசின் கடமை தீர்ந்துவிடவில்லை. பார்லிமென்டரி பாதையிலிருந்து நேரடி நடவடிக்கைக்கு அது திரும்ப வேண்டும். இல்லையேல், இம்மாதிரி விபத்துக்கள் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கும்.

திருவிதாங்கூர் தமிழர் இயக்கம் உரிமைப் போராட்டமேயன்றி உத்தியோகக் கிளர்ச்சியல்ல. ஆகவே உரிமைக்காக தியாகம் செய்யும் தீரர்களே தி. த. காங்கிரசில் நிரம்பியிருக்க வேண்டும்.

தலைவரின் மனமாற்றம்!

பாளையங் கோட்டை ஒப்பந்தத்தை நிராகரித்ததின் விளைவாக திரு. நத்தானியல், தி. த. காங்கிரசின் தலைமைப் பதவியை ராஜிநாமாச் செய்தார். பின்னர் மறு கூட்டத்திலேயே கமிட்டி நம்பிக்கை தெரிவித்ததின் பேரில் ராஜிநாமாவை வாபஸ் பெற்றுக் கொண்டிருக்கிறார்! திரு. நத்தானியல், கொள்கையில் நல்ல உறுதியுடையவர். ஆனால், நடைமுறையிலும் அவர் சற்று உறுதியுடன் நடந்து கொள்ள வேண்டும். அவர் திடமனது காட்டியிருந்தால், "பாளையங் கோட்டை விபத்து" ஏற்பட்டிருக்க முடியாது. என்றாலும், ஒரு தவறிலிருந்து இன்னொரு தவறுக்குத் தாவாமல் தி. த. காங்கிரசின் முடிவிற்குத் தலை வணங்கியதற்காக அவரைப் பாராட்டுகிறோம். ஒரு தலைவருக்குரிய பெருந்தன்மையுடன் அவர் நடந்து

கொண்டிருக்கிறார். இனி அவர் முன்புள்ள முதல் வேலை தி. க. காங்கிரசிலுள்ள - லட்சியவாதிகளின் கட்சியைப் பலப்படுத்துவதேயாகும். அதன் மூலம் தான் அவர் சமக்குள்ள சங்கடங்களைப் போக்கிக் கொள்ள முடியும். திரு. நதானியல், தமது இயக்கத்திற்கு தாய்த் தமிழகத்தில் ஆதரவு தேடவேண்டும். மந்திரிகளிடம் தொடர்பு கொள்வதால் மட்டுமே அந்த ஆதரவு கிடைத்து விடாது. மக்களிடம் சென்று பிரசாரம் செய்ய வேண்டும். அந்த விஷயத்தில் அவருக்கு முழு மூச்சுடன் ஆதரவு கொடுக்க தமிழரசுக் கழகம் காத்திருக்கிறது; தமிழ் நாட்டு மக்கள் குமரிமுனைத் தமிழர்களை ஒருபோதும் கைவிடமாட்டார்கள். இது திண்ணம்.

திவாகர் கமிட்டி தீர்ப்பு

“சாதி வேற்றுமை மலத்தினும் கீழானது” என்றார் மகாத்மா. “சாதி வெறியர்கள் மலத்திடையே புழுத்த புழுக்களினும் கொடியர்” என்றார் வள்ளலார். இந்த வேற்றுமையை - வெறியை எவ்வகையானும் ஒழித்துக் கட்ட வேண்டும். அதற்கு வழி வகைகள் காண திவாகர் என்பார் தலைமையில் மேலிடத்து ஆட்சியாளர்கள் ஒரு குழு அமைத்திருக்கின்றனர். அந்தக் குழுவினர் பல மாதங்கள் கூடிக்கூடி ஆலோசித்த பிறகு ஒரு திட்டத்தை வெளியிட்டிருக்கின்றனர்.

“எடுக்கவிருக்கும் குடிமதிப்புக்கணக்கில் சாதிப் பெயர்களுக்கு இடமளிக்கக் கூடாது.”

தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் போன்ற அரசாங்க அலுவலகங்களிலும் கல்வி நிலையங்களிலும் சலுகை பெறும் சாதியினர் - சலுகைக்குரிய இடங்களில் மட்டும் சாதிப் பெயர்களைக் குறிப்பிடலாம். மற்ற வகையில் யாரும் எவ்விடத்தும் சாதிப் பெயர்கள் உபயோகிப்பதை அரசினர் அங்கீகரிக்கக் கூடாது.

இவை திவாகர் குழுவினர் கண்ட முடிவுகளில் முக்கிய அம்சங்கள். இவற்றை நாம் மனமுவந்து வரவேற்கிறோம். வடநாட்டை விட தென்னாட்டில் தான் சாதி வெறி பேய்த் தாண்டவம் புரிகிறது. நாட்டுக்காக ஒரு விரலைக்கூட அசைக்காதவர்களெல்லாம் நாட்டுத் தலைவர்கள் என மதிக்கப் படுவதற்கு சாதி வெறி பயன்படுகிறது. கள்ளமார்க்கெட் நடத்தும் வர்த்தகர், உணவைப் பதுக்கும் நிலப்பிரபு, உழைப்பாளியின் ஊதியத்தைத் திருடும் முதலாளி ஆகியவர்கள் கூட சாதிச் சங்கங்கள் மூலம் மக்கள் ‘தலைவர்களா’க மலர முடிகிறது. புலவர்களுக்குத் திருநாள், தலைவர்களுக்குப் பிறந்த நாள் ஆகியவை கூட சாதிப் பற்றுக் கொண்டே கொண்டாடப்படுகின்றன.

வடநாட்டில் இஸ்லாமியருக்கு எதிராக இந்து என்ற உணர்ச்சி உரம் பெற்றிருப்பதால் அங்கே சாதிக்கு சாதி வேற்றுமையிருப்பினும், அது வெறியாக உருவெடுப்பதில்லை. தென்னாட்டிலோ - குறிப்பாக தமிழ்நாட்

(9-ம் பக்கம் பார்க்க)

சிலம்பு காட்டும் செந்நெறி

—ப. பொ. சி.

‘துறவு’ நெறி, தமிழ் இனத்தவர் தொன்று தொட்டு கடைப்பிடித்து வரும் பண்பன்று. இடைக்காலத்தில் பிற இனத்தவரால் இறக்குமதி செய்யப்பட்ட சரக்காகும். வடநாட்டிலிருந்து வந்து தமிழ் நாடு புகுந்த பௌத்தம், சமணம் போன்ற புறச் சமயங்களின் போதனையால், உள் நாட்டு சமயங்களான சைவமும் வைணவமும் கூட துறவு நெறியை அங்கீகரித்தன. “ஊரும் சதமல்ல; உற்றார் சதமல்ல.........தேசத்திலே யாரும் சதமல்ல” என்ற வாக்கு வாழ்க்கையை வெறுத்தவர்களின் வறட்டு வேதாந்தமேயன்றி வாழ்க்கை நெறியல்ல.

தமிழர், காதலையும் வீரத்தையும் இரு கண்ணெனக் கருதியவர். ஆகவே, காதலைப் பழிக்கும் வீரத்தைவெறுக்கும் துறவுநெறியைத் தமிழர் அங்கீகரியாததில் ஆச்சரியமில்லை. மற்றும், பெண்ணினத்தைப் பெருமைப்படுத்துவது தமிழரின் பிறவிக்குணம். துறவு நெறியோ சமூகத்தில் சரி பாதியினரான பெண்ணினத்தை வெறுக்கிறது. ஆகவே, எவ்வகையில் பார்த்தாலும் துறவு நெறி தமிழர் பண்பாடுகளுக்கு ஏற்றதன்று.

தமிழர், துறவு நெறியை ஏற்காதது மட்டுமல்ல; அதை எதிர்த்தார்கள் என்பதற்கும் எத்தனையோ சான்றுகள் உண்டு. “கடந்த ஞானியும் துறப்பரோ, தம் மக்கள் மேல் காதல்” எனக்கூறிய தமிழறிஞர், குழவியின்பத்தைத் துறக்கும் கொள்கையைக் கண்டிப்பவரன்றோ!

மழித்தலும் நீட்டலும் வேண்டா ;
உலகம்
பழித்தது ஒழித்து விடின்

“உலகம் பழிக்கும் செயல்களை ஒழித்து ஒழுக்கத்தோடு வாழ்பவன், மொட்டையடித்து

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டிலோ, இறைவன் கோயிலிலிருந்து இடுகாடுவரை எல்லாவிடங்களிலும் சாதிவேற்றுமை இடம் பெற்றிருக்கிறது.

ஆனால், சாதி வேற்றுமையை ஒழிக்க வேண்டுமென்ற ஆர்வத்தில் அறிவுத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை சமப்படுத்துவதற்காக அளிக்கப்பட்டு வரும் சலுகைகளை ஒழித்துவிடக்கூடாது.

நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு;
அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை

இஃது நன்மை என்ற பெயரில் தீமை புரிவார்க்கு வள்ளுவர் விடுத்த எச்சரிக்கை. திவாகர் குழுவினர், சலுகைக்கான இடத்து சாதிப் பெயர்களை உபயோகிக்க உரிமையளித்திருப்பதால் தீமை யெதுவும் நேராதென்ற திடமனதுடன் திட்டத் வரவேற்கிறோம்.

சன்னியாசியாகத் தேவை இல்லை; தாடி வளர்த்து தவக் கோலம் பூணவும் வேண்டிய தில்லை.'' என்ற திருக்குறள் கருத்தும் வேடதாரிகளின் துறவை வெறுத்துப் பேசுகிற தன்றோ!

★

துறவு நெறியைச் சங்க காலத் தமிழர் அங்கீகரியாவிட்டாலும், அதைப் பற்றி அறிந்திருந்தனர் என்பதற்கு திருக்குறளில் வரும் துறவற இயல் சான்றாகும். ஆனால், தமிழ்ப் பெண்கள் தவவேடம் பூணும் செய்தியை சிலப்பதிகாரத்தின் மூலம்தான் முதன் முதல் அறிகிறோம்.

சங்க இலக்கியங்களில் காணாததும், தமிழர் வாழ்வில் கடைப்பிடிக்கப்படாததுமான பெண் துறவு, சிலப்பதிகாரத்தில் அறிமுகப் படுத்தப்படுகிறது. பிறந்த நாடுவிட்டுப் பிறநாடு செல்லும் கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகள் என்னும் பெண் துறவியை இடைவழியில் சந்திக்கின்றனர். கவுந்தியடிகள் மயிற் பீலியும், மனைதோறும் பிச்சை யெடுக்கும் பாத்திரமும் கையில் கொண்ட சமணத் துறவி யாவார்.

சிலப்பதிகாரக் காலத்தில் துறவு நெறியைத் தமிழர் அங்கீகரித்திருந்தனர் என்று நம்பினாலும், பெண்களும் துறவு கொள்வதை அங்கீகரித்தனர் என்று நம்புவதற்கில்லை.

மாபெருந் தானமாய்
  வான்பொருள் ஈத்தாங்கு
இந்திர விகாரம்
  ஏழுடன் புக்காங்கு
அந்தர சாரிகள்
  ஆறைம் பதின்மர்
பிறந்த யாக்கை
  பிறப்பற முயன்று
துறந்தோர் தம்முன்
  துறவி யெய்த

என்ற சிலப்பதிகார வரிகள், கோவலன் கொலையுண்ட செய்தி கேட்ட மாசாத்துவான், வழி வழி ஈட்டிய பொருளனைத்தையும் வறியவருக்குத் தானமீந்து புத்தமதத் துறவியானதாகக் கூறுகின்றன. ஆனால், மாசாத்துவானோடு அவனது மனைவியும் துறவிக் கோலம் கொள்ளவில்லை.

துறந்தோன் மனைவி
  மகன்துயர் பொறாஅள்
இறந்த துயரெய்தி
  இரங்கிமெய் விடவும்

மாசாத்துவான் மனைவி, மைந்தனை இழந்த ஏக்கத்தால் உயிர் விட்டதாகத் தெரிகிறது. அப்படியே,

கண்ணகி தாதை
  கடவுளர் கோலத்து
அண்ணலம் பெருந்தவத்து
  ஆசீவகர்முன்
புண்ணிய தானம்
  புரிந்தறம் கொள்ளவும்

கண்ணகி தந்தை மாநாய்க்கனும், தன் மகளுக்குற்ற கொடுந்துயர் அறிந்து மனம் வருந்தியவனாய் தவக்கோலம் பூண்டு சமணப் பள்ளியை அடைந்ததாக அறிகிறோம். ஆனால், மாநாய்க்கன் மனைவி, தானும் துறவு கொள்ளாது கோவலனின் தாயைப்

போன்றே கொடுந்துயரெய்தி உயிர் விடுகின்றாள். சிலப்பதிகாரக் காலத்தில் பெண் துறவு அங்கீகரிக்கப் பட்டிருப்பின் கோவலன் - கண்ணகி தாயர்களும் தவக்கோலம் பூண்டிருப்பார்கள். பெண் துறவு அங்கீகரிக்கப் படாததனாலேயே அவர்கள் "தற்கொலை" புரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

எனவே, சிலப்பதிகாரத்தில் வரும் கவுந்தியடிகளும் மணிமேகலையும் இளங்கோவடிகளால் சிருஷ்டிக்கப்பட்ட பாத்திரங்கள் என நம்புவதற்கில்லை. சமயவாதிகள் செய்த ஒட்டு வேலையோ என ஐயுறும் வகையில் அந்தப் பாத்திரங்களுக்குரிய பகுதிகள் அமைந்திருக்கின்றன.

சிலம்பை இயற்றிய இளங்கோவடிகளைச் சமணத் துறவியாகக் கருதுகின்றனர் சிலர். இவர்களது கூற்று ஆராய்ச்சியிடையே எழுந்த ஐயப்பாடேயன்றி, ஆராய்ச்சியின் முடிவன்று.

குணவாயிற் கோட்டத்து
அரசு துறந்திருந்த
குடக்கோச் சேரல்
இளங்கோ அடிகள்

என வரும் பதிகவரிகளின் கருத்து இளங்கோவடிகள் சமணரே என்பதற்குச் சான்றாகக் காட்டப்படுகின்றது. 'கோட்டம்' என்ற சொல் சமண தெய்வத்தின் கோயிலைக் குறிப்பதாக நம்பப்படுகிறது. ஆனால், சிலப்பதிகாரத்தை நன்கு ஆராயுமிடத்து 'கோட்டம்' என்ற சொல், சகல சமய தெய்வங்களின் கோயில்களுக்கும் வழங்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

நுதல்விழி நாட்டத்து
இறையோன் கோட்டம்

எனச் சிவன் கோயிலையும்,

கோழிச் சேவற்
கொடியோன் கோட்டம்

என முருகன் கோயிலையும்,

சிறையோர் கோட்டம்

என்ற வரியில் பகைவர்கள் அடைபட்டுக்கிடக்கும் சிறைச்சாலையையும் கோட்டம் என்ற பெயராலேயே குறிப்பிட்டிருக்கிறார் இளங்கோவடிகள். எனவே, இளங்கோவடிகள் இருந்ததாகச் சொல்லப்படும் குணவாயிற் கோட்டம், அருகன் கோயில்தான் என்று துணிவதற்கில்லை.

மற்றும், பதிகவரிகளில் வரும் 'அடிகள்' என்ற சொல் சமண சமயத் துறவிகளுக்கும் வழங்கி வந்ததாலும், சிலப்பதிகார ஆசிரியர், 'அடிகள்' எனச் சிறப்புப் பெயர் பெற்றிருப்பதாலும் அவர் சமணரே என்று சாதிக்கின்றனர். ஆனால், அடிகள் என்ற பெயர் சமணத்துறவிகளுக்கே யன்றி, சாதாரண மனிதருக்கும் வழங்கப்பட்டு வந்ததாக சிலப்பதிகாரத்தால் அறிகிறோம்.

குமரி வாழையின்
குருத்தகம் விரித்தீங்கு
அமுதம் உண்க
அடிகள்............

எனக் கோவலனை அழுதுண்ணா அழைக்கும் கண்ணகி, அவனை அடிகள் எனக் குறிப்பிடுவதைக் காண்கிறோம். இதிலிருந்து, தம்மினும் பெரியாரை அல்லது தாம் மதித்தற்குரியாரை 'அடிகள்' என்ற பெயரால் அழைக்கும் வழக்கம் சிலப்பதிகாரக் காலத்தில் தமிழரிடையே இருந்து வந்ததாகக் கூறலாம். ஆகவே, அடிகள் என்ற பெயரைக் கொண்டு மட்டுமே இளங்கோவடிகள் சமணத் துறவி என நிச்சயிக்க முடியாது.

மேலும், பதிக வரிகளில் சிலப்பதிகார ஆசிரியர், "அரசு துறந்திருந்த குடக்கோச் சேரல் இளங்கோ" என்றே குறிப்பிடப்படுகின்றார். ஆம்; இளங்கோ, ஊராளும் உரிமையைத் துறந்தாரேயன்றி உலகப் பற்றைத் துறக்கவில்லை. ஆகவே, இந்த சொற்றொடரைக் கொண்டும் இளங்கோ துறவியெனத் துணிவதற்கில்லை.

சிலப்பதிகாரத்தின் இறுதியிலுள்ள வரந்தரு காதையில், கற்சிலை வடிவிலுள்ள கண்ணகியின் ஆவி தேவந்தியின் மேல் தோன்றி,

வஞ்சி மூதூர்
  மணிமண் டபத்திடை
நுந்தை தாள்நிழல்
  இருந்தோய் நின்னை
அரைசுவீற் றிருக்குந்
  திருப்பொறி புண்டென்று
உரைசெய் தவன்மேல்
  உருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க்
  கொடித்தேர்த் தானைச்
செங்குட் டுவன்றன்
  செல்லல் நீங்கப்
பகல்செல் வாயிற்
  படியோர் தம்முன்
அகலிடப் பாரம்
  அகல நீக்கிச்
சிந்தை செல்லாச்
  சேணெடுந் தூரத்து
அந்தமில் இன்பத்து
  அரசாள் வேந்து........

எனத் தமது வரலாற்றை உரைத்ததாக இளங்கோவடிகளின் கூற்றாகக் குறிப்பிடப்படுகின்றது. இது தீர்ந்த உண்மையன்று. இறந்துபட்ட ஒருவர், வாழுகின்ற ஒருவர் மேல் தோன்றி வாழ்த்துரை கூறுவதென்பது வெறும்நம்பிக்கையேயொழிய, நடைமுறையில் காணக்கூடியதல்ல. இந்த நம்பிக்கையை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு இளங்கோவடிகள் சமணரே என்று சாதிப்பது அறிவுக்குப் பொருந்துவதன்று.

மற்றும், சிலப்பதிகாரத்தின் இறுதிக் காதையில்,

தெரிவுறக் கேட்ட
  திருத்தகு நல்லீர்
பரிவும் இடுக்கணும்
  பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின்
  தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின்
  புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் துறமின்
  உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்ம்மின்
  தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின்
  தீநட் பிகழ்மின்

(38-ம் பக்கம் பார்க்க)

மகாகவி பாரதி பெயர் வாழ்க!

இருளைக் கிழித்து முகில் பிளந்து
இரவி தரும் பொற் சுட ரொளிபோல்
அருட் கவி, பிறந்தான் தமிழ் நாட்டில்
அன்னை பராசக்தி மனங்கனிந்தாள்

வெருண்டது வெள்ளை ஆட்சி வர்க்கம்
விடுதலைப் புலவன் முரசொலியால்
மருளது நீங்கி மக்க ளெல்லாம்
மார்தட்டி வீரப் போர்புரிந்தார்

அடிமைத் தளையைக் களைகவென
ஆர்த்தது பாரதி பாடலடா!
மிடிமை, தகர்ந்தது சாதிப்பேய்
வேருடன் சாய்ந்தது, மேருவென

இடியென முழங்கிடும் பாரதிபண்
எழும்பிடும் புயலெனத் தேசபக்தி
படிமிசை மா கவிக் குயில் பெயரும்
பல்லாண்டு, பண்புடன் வாழ்ந்திடுக!

டி. வி. எஸ். பாரதிமோகன்.

கருத்தோவியம்

பழைய இலக்கியங்களைப் புதிய பார்வையுடன் ஆராய்ந்து அவற்றிலுள்ள பயனற்ற பழைய கருத்துக்களுக்குச் சீட்டுக் கொடுத்து விட்டு, மக்களது வாழ்க்கையில் தோன்றும் புதுப் புதுப் பிரச்னைகளுக்குப் பொருந்துமாறு வழி நூல்கள் செய்ய வேண்டும்.

ஃ ஃ ஃ

தமிழகம் தனியரசு காணும் நேரம் வந்து விட்டது. அந்தத் தனியரசில் புதிய சமூகத்தை அமைக்க தமிழ்மொழிபயன்பட வேண்டும். மேற்கே தோன்றி காட்டாற்று வெள்ளம் போல் கரைகடந்து ஓடிவரும் விஞ்ஞான அறிவைத் தமிழ் நாட்டில்—தமிழ்ப் பயிரில் ஒழுங்குப் பெறப் பாய்ச்ச வேண்டும். தமிழர் வாழ்வு மீண்டும் தமிழர் வரலாற்றின் அடியாகத் துவங்க வேண்டும். —ம பொ. சி.

கண்ணகி அச்சகம்

கடந்த 24—8—50ல் சென்னை பிரதம மாகாண மாஜிஸ்திரேட் முன்பு கண்ணகி அச்சகத்தின் உரிமையாளராகவும் 'தமிழ் முரசு' வெளியீட்டை அச்சிடுவோராகவும் திரு. ம. பொ. சிவஞானம் தம்மைப் பதிவு செய்து கொண்டார்.

★

"செங்கோல்"

அதே நாளில் திரு. ஆ. கொ. வேங்கடராமானுசன் "செங்கோல்" எனும் வாரவெளியீட்டின் ஆசிரியராகவும் வெளியிடுபவராகவும் தம்மைப் பதிவு செய்து கொண்டார்.

வள்ளுவர் வகுத்த வழி

ம. பொ. சி

நல்ல நாடு

'நாடு' என்ற சொல், வெறும் நிலத்தையும் மக்களையும் மட்டுமே குறிப்பதாகக் கொள்வது உலக வழக்கு. அந்த இரண்டு மட்டுமேயல்லாமல், வேறு சில இன்றியமையாத இயல்புகளும் நாட்டிற்கு அவசியம் என்கிறது திருக்குறள். 'நாடு' என்ற அதிகாரம் ஒரு நல்ல நாட்டிற்குரிய இலக்கணங்களை விளக்குகின்றது.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு

"உணவைப் பெருக்கும் உழவர்கள், ஊராளும் திறனுடைய அறிஞர்கள், திரைகடலோடியும் திரவியம் தேடும் வணிகர்கள் ஆகியோர் நிறைந்த நாடே நல்ல நாடு" என்பது மேற்படி குறட்பாவின் பொதுப்பொருள். 'செல்வர்' என்ற சொல்-வணிகர்களை மட்டுமின்றி தொழில் நிபுணர்களையும் குறிப்பதாகக் கொள்ளலாம்.

'தக்கார்' என்ற சொல்லுக்கு, 'துறந்தோர், அந்தணர் முதலாயினோர்' என்று பொருள் கூறுகின்றார் பரிமேலழகர். அவரது கருத்து இன்றைய உலகம் ஏற்கத் தக்கதன்று. வள்ளுவர் கருத்தும் அதுவாயிருக்க முடியாது. 'தக்கார்' என்ற சொல்லுக்கு "நாட்டை நல்வழியில் செலுத்தக்கூடிய அறிஞர்கள்" என்பதே பொருள்.

மற்றும், 'தாழ்விலாச் செல்வர்' என்பதற்கு, "வழங்கத் தொலையாத செல்வம் படைத்தவர்" எனப் பொருள் கூறுகின்றார் பரிமேலழகர். ஒருவன் உடைமையாளனாக இருப்பது அவன் முப்பிறப்பில் செய்த புண்ணியத்தின் பலன் என்று மூடத்தனமாக எண்ணிய காலத்தில் எழுதப்பட்ட உரை இது. ஆனால், செல்வத்தைச் சமமாக்கும் பொதுவுடைமைக் கொள்கை வளர்ந்து வரும் இக்காலத்தில் வழங்கத் தொலையாத செல்வம் படைத்த 'குபேரர்கள்' ஒரு நாட்டிற்கு அவசியம் என்ற கொள்கை ஒப்புக்கொள்ளத் தக்கதன்று. 'தாழ்விலாச் செல்வர்' என்பதற்கு, ஏழை-பணக்காரர் என்ற பொருளாதார ஏற்றத் தாழ்வின்றி நாட்டின் செல்வத்தை மக்கள் அனைவரும் சமமாக அடைவதைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். அயோத்தியில்,

எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாருமில்லை ; உடையார்களுமில்லை

என்று கம்பர் கூறும் கருத்து மேற்சொன்ன குறளுக்குத் தந்த விளக்கவுரையாகும். ஆம்; 'எல்லாரும் செல்வர்' என்ற நிலையுடைய நிலமே நல்ல நாடு.

★

'பகை' இரு வகைப்படும். அவை உட்பகை, புறப்பகையாம். ஒரே நிலப்பரப்பில்-

ஒரே ஆட்சியின்கீழ் வாழும் மக்கள், சாதி - சமய - கட்சி வேற்றுமைகளால் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து, போரிடு வதையே உட்பகை என்பர் அறிஞர்கள். இந்த உட்பகை என்னும் கொடிய நோய்க்கு இரையான நிலம் நாடன்று. உருவத்தால் பல கோடியினரா யினும், உள்ளத்தால் ஒருவரே எனத்தக்க மக்களைக் கொண்ட நிலமே மாண்பு பெற்ற நாடு.

மற்றும் அரசியலின் பெயரால் கொலைபுரியும் கொடியவர்களா லும் ஒரு நாடு தனது சிறப்பு குன்றி சீரழியும். இந்த உண்மை களை,

**பல்குழுவும் பாழ்செய்யு மூட்பகையும்
வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு.**

என்ற குறள் நமக்குத் தெளி வாக உணர்த்துகின்றது. "வேந்தலைக்கும் கொல் குறும்பு" என்ற சொற்றொடர் அரசை அழிக்கக் கொலைபுரியும் கூட்டத்தையே குறிப்பதாகக் கொள்ளலாம்.

'குறும்பர்' என்ற சொல் கீழ்க் குணம் படைத்த மக்க ளையே குறிக்கும். "கொல் குறும்பு" என்பதால், கொலைக் குணம் படைத்த கொடியவர் களையே குறிப்பிடுகின்றார் வள் ளுவர். அரசை அழிப்பதற் கென்றே திட்டமிட்டுக் கொலை பாதகச் செயல்களைப் புரி வோரை "அராஜகக் கூட்டம்" எனக் கூறும் அரசியல் சாத் திரம். இவர்களை இரக்கமின்றி அழிக்க வேண்டியது நாடாள் வோரின் கடமை என்பதை,

**கொலையிற் கொடியாரை
வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்**

என்ற குறள் வற்புறுத்துகின் றது. பயிரோடு சேர்ந்து வள ரும் களை, பயிரைப் போன்றே இருக்கும். ஆனால், அதைப் பயிரினின்று பிரித்துப் பிடுங்கி எறியாது விட்டால் பயிரையே அழித்துவிடும். அதுபோன்றே அரசை அழிப்பதையே தங்கள் ஆயுள் தொண்டாகக் கொண்டு விட்ட அராஜகக் கூட்டமும் மக்களோடு மக்களாகவே கலந் திருக்கும். ஆனால், அரசாள் வோர் எச்சரிக்கையோடு அந் தக் கூட்டத்தை மக்களிலிருந்து வேறுபடுத்தாவிடின், அது மக் கள் சமுதாயத்தையே துன் பத்திலாழ்த்தித் தொலைத்து விடும். பயிரில் புகுந்த களையை வேரோடு பிடுங்கி எறிகிறோம். அதுபோலவே மக்களோடு மக் களாகவே கலந்துள்ள அரா ஜகக் கொலைக் கூட்டத்தைப் பூண்டோடு அழிக்க வேண்டி யது ஆளுவோரின் கடமை யாகும். இந்த அழிப்பு வேலை, "குற்றமன்று, கோவேந்தன் தொழில்" என்கிறார் திருவள் ளுவர்.

★

அடங்காப் பசி, தீராப் பிணி, அழிக்க முடியாப் புறப் பகை - இவையில்லாததே நாடு. பசியின் கொடுமையைக் கூறு மிடத்து, "பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்" என்றனர் முன் னோர். ஒரு சமுதாயம் முழுவதி லுமே பசிக் கொடுமை பரவி விடுமாயின், அத்தகைய சமு

தாயத்தைப் படைத்த நிலம் ஒரு நல்ல நாடாகாது. ஆகவே,

உறுபசியும் ஓவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு

என்கிறார் திருவள்ளுவர். பசியென்னும் தீ நாடு முழுவதும் படர்ந்து விடுமாயின், அதையொட்டி பிணிகள் பெருகும். காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த புறப் பகைவர்கள் அது தான் சமயமென நாட்டை எளிதில் கைப்பற்றிக் கொள்வர்.

★

நாட்டில் பசியும் பகையுமின்றி வசியும் வளனும் மிகுந்திருப்பினும், உட்பகை - புறப்பகையின்றி மக்கள் ஒரு குலமாக வாழ்ந்து வரினும் அரசன் செங்கோல் பிறழ்ந்த கொடுங்கோலனாயின் அவனது ஆளுகைக்குட்பட்ட நிலமும் நாடல்ல.

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

ஒரு நாட்டுக்கு வேண்டிய நல்லியல்புகளுள் தலையாயது செங்கோலரசைப் பெறுவதாகும். ஆகவே, எல்லா நலன்களும் உடைத்தா யிருப்பினும் கொடுங்கோல் தோன்றியவிடத்து, அந்நலன்கள் அனைத்தும் விரைவில் அழிந்து விடும் என்கிறார் திருவள்ளுவர். செங்கோலரசனைப் பெறாத நிலம் மக்கள் வாழத்தக்க நாடாகாது என்ற காரணத்தாற்றான்,

கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டின்
கடும்புலி வாழும் காடு நன்றே

என்றாள் ஔவைப்பிராட்டி. காடு பயங்கரமானதுதான். ஆயினும், கொடுங்கோலரசனின் நாட்டைவிட கொடிய மிருகங்கள் வாழும் காடுகூட மேலானது என்றனர் ஆன்றோர்.

குறள் கூறும் இலக்கணங்களைக் கவனத்தில் கொண்டு பார்த்தால் நமது தமிழகம் ஒரு நல்ல நாடாக இன்று இருக்கவில்லையென்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம். தமிழ் மக்களிடையேயுள்ள குழு வேற்றுமைகள் கொஞ்சமல்ல. ஒன்றுக்கொன்று ஏற்றத் தாழ்வுடைய சாதிக் குழுக்கள் எத்தனை? ஒன்றுக்கொன்று மனவேற்றுமையுடைய மதக் குழுக்களும் எத்தனை? அந்தோ! தமிழ் நாட்டிலுள்ள சாதி, சமய குழு வேற்றுமைகளுக்குக் கணக்கே இல்லை. இந்த வேற்றுமைகளின் விளைவாக வளர்ந்து வரும் உட்பகையை நினைந்து விட்டால் நம் நெஞ்சம் புண்ணாகும். சாதிக்கு சாதி பகை; மதத்திற்கு மதம் விரோதம். போதாக் குறைக்கு புதிதாக முளைத்த கட்சிக் குழுக்களால் விளையும் கலகங்களும் கொஞ்சமல்ல. இதன் விளைவைக் குறிக்குமிடத்து, "பாழ் செய்யும் உட்பகை" என்று உளம் நொந்து கூறுகின்றார் திருவள்ளுவர்.

இனவாரி இந்தியா

—பாரதியார்

பல்லவி

தாயின் மணிக்கொடி பாரீர்—அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்

சரணங்கள்

கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர்—எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரிய ரவ்வீரர் ;—தங்கள்
நல்லுயி ரீந்துங் கொடியினைக் காப்பார்

அணியணி யாயவர் நிற்கும்—இந்த
ஆரியக் காட்சியோ ரானந்த மன்றோ ?
பணிகள் பொருந்திய மார்பும்—விறற்
பைந்திரு வோங்கும் வடிவமுங் காணீர் ;

செந்தமிழ் நாட்டுப் பொருநர்,—கொடுந்
தீக்கண் மறவர்கள், சேரன்றன் வீரர்,
சிந்தை துணிந்த தெலுங்கர்,—தாயின்
சேவடிக் கேபணி செய்திடு துளுவர்,

கன்னட ரெட்டிய ரோடு,—போரிற்
காலனு மஞ்சக் கலக்கு மராட்டர்,
பொன்னகர்த் தேவர்களொப்ப—நிற்கும்
பொற்புடை யாரிந்து ஸ்தானத்து மல்லர்,

பூசல முற்றிடும் வரையும்—அறப்
போர் விறல் யாவும் மறப்புறும் வரையும்
மாதர்கள் கற்புள்ள வரையும்—பாரில்
மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர்,

பஞ்ச நதத்துப் பிறந்தோர்,—முன்னைப்
பார்த்தன் முதற்பலர் வாழ்ந்த நன்னாட்டார்,
துஞ்சும் பொழுதினுந் தாயின்—பதத்
தொண்டு நினைந்திடும் வங்கத்தி னோரும்

சேர்ந்ததைக் காப்பது காணீர் !—அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க !
தேர்ந்தவர் போற்றும் பரத—நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க !

(தாயின்)

பாரதி மலர்:

> பாரதியாரின் பாடல்கள் தமிழகத்தில் வீடு தோறும் வீதி தோறும் முழங்கக் கேட்கிறோம். ஆனால், சமூகம்-அரசியல்-பொருளாதாரம் ஆகியவை பற்றி அவர் எழுதியுள்ள கட்டுரைகளை அநேகர் படித்தறியார். ஆகவே, பாரதியாரின் கட்டுரைகளிலுள்ள சிறந்த பகுதிகளைத் தொகுத்து பாரதி மலராக வெளியிடுகிறோம்.
>
> —ஆசிரியர்.

தமிழ் மக்களுக்கு

தமிழ் நாட்டு வீரர்களுக்கும், கவிஞர்களுக்கும், வள்ளல்களுக்கும் இதுவரை எவ்விதமான திருவிழாவையும் காணவில்லை. பூர்வீக மகான்களின் ஞாபகத்தைத் தீவிரமான பக்தியுடன் வளர்க்காத நாட்டில் புதிய மகான்கள் பிறக்க வழியில்லை. தப்பித்தவறி ஓரிருவர் தோன்றினாலும் அவர்களுக்குத் தக்க மதிப்பிராது. பண்டைக்காலத்து சக்திமான்களை வியந்து போற்றுவதும், அவர்களுடைய தொழிற் பெருமைகளை உலகறிய முழக்குவதும், கூடிய வரை அவர்களைப் பின்பற்ற முயலுவதுமாகிய பழக்கமே இல்லாத மக்கள் புதிய சக்திமான்களை என்ன வகையிலே கவனிப்பார்கள்?

எதனை விரும்புகிறோமோ அது தோன்றுகிறது; எதை ஆதரிக்கிறோமோ அது வளர்ச்சி பெறுகிறது. பேணாத பண்டம் அழிந்து போகும். பழக்கத்தில் இல்லாத திறனும் இழந்துவிடப்படும். அறிவுடையோரையும், வள்ளல்களையும், வீரர்களையும் கொண்டாடாத நாட்டில் அறிவும், விவகார சிந்தனையும், வீரமும் மங்கிப் போகும். தமிழ் நாட்டில் இப்போது புதிய உயிர் தோன்றியிருப்பதால், நாம் இவ்விஷயத்தில் மந்தமாக இராமல் கம்பன் - இளங்கோ - திருவள்ளுவர் முதலிய மகாகவிகளுக்கு ஞாபகச் சிலைகளும், ஆண்டு விழாக்களும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

திருவள்ளுவர் மயிலாப்பூரிலே பிறந்தவர். அங்கே திருவள்ளுவர் கோயில் இப்போதும் இருக்கிறது. அவர் பிறந்த நாள் நிச்சயமாகத் தெரியவில்லை.

ஐம்பெருங் காவியங்களிலே சிறந்ததாம் "சிலப்பதிகாரம்" செய்த இளங்கோ முனிவர் வஞ்சி நகரத்தில் பிறந்தவர். இந்த

வஞ்சி நகரம் திருச்சினாப்பள்ளிக்கு அருகேயுள்ள கரூர் என்று பண்டித மு. ராகவய்யங்கார் தீர்மானம் செய்கிறார். இந்த ஆசிரியரின் பிறந்த நாளையும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை.

மயிலாப்பூர் திருவள்ளுவர் கோயிலை செம்மையாகக் கட்ட வேண்டும். இப்போது மிகவும் எழ்மை நிலையில் இருக்கிறது. கம்பர் பிறந்த திருவெழுந்தூரிலும், இளங்கோ வாழ்ந்த கரூரிலும் ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்த வேண்டும். இந்தப் புலவர்களின் பிறந்த நாட்கள் நிச்சயிக்கப்படாததால் சரசுவதி பூசைக்கு முன்பு அல்லது பின்பு, குறிப்பிட்டதொரு நாளில் இந்த மகான்களின் ஞாபகத்தைக் கொண்டாடுவது பொருத்தமுடைய செய்கையாகும்.

பண்டித சபைகளையும், பொதுஜன ஆரவாரங்களையும் கோலாகலமாக நடத்தி எல்லா

பாரதியின் செய்திகள்

வருணத்தாரும் எல்லா மதத்தாரும் சேர்ந்து கொண்டாடினால், மகிழ்ச்சியும் அறிவுப் பயனும், மனப்பண்பும் பெற இடமுண்டாகும். மதபேதங்கள் பாராட்டாத விழாக்கள் தமிழ் நாட்டில் அவசியமென்பதை எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

ஆங்கிலப் பண்டிதர்களுக்கு அறிவுரை

தமிழ் மக்கள் தமது மொழியை மேன்மைப் படுத்த விரும்பினால் முதலில் செய்ய வேண்டிய காரியம் ஒன்றுண்டு. அதாவது, ஆங்கிலம் படித்த வக்கீல்களும், ஆங்கிலப்பள்ளிக்கூட வாத்தியார்களும் தாம் தொழில் புரியும் நீதி மன்றங்களையும், பள்ளிக்கூடங்களையும் விட்டு வெளியேறிய உடனே ஆங்கிலத்தில் பேசுவதை விட்டு தாம் தமிழர் என்பதை அறிந்து நடக்க வேண்டும். பந்தாடும் போதும், சீட்டாடும் போதும் ஆசாரத்திருத்த சபைகளிலும், எங்கும் எப்போதும் இந்தப் "பண்டிதர்கள்" ஆங்கிலம் பேசும் வழக்கத்தை நிறுத்தினால் உடனே நாடு மாறுதலடையும்.

இவர்கள் தமிழ் எழுதக் கற்றுக் கொள்ள வேண்டும். அத்தனை பேரும் தமிழ்ப் பத்திரிகை வாங்கிப் படிக்க வேண்டும். இவர்கள் எழுதுகிற கதை, காவியம், விளையாட்டு வார்த்தை, வினைவார்த்தை, சாத்திர விசாரணை, அரச நீதி எல்லாவற்றையும் தமிழில் எழுத வேண்டும். பஞ்ச பூதங்களின் இயற்கையைப் பற்றின ஆராய்ச்சிகளிலே ஐரோப்பாவில் வழங்கும் விஞ்ஞான சாத்திரங்களை தமிழில் எழுதுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

விதவைகளுக்கு வாழ்வளியுங்கள் !

இந்திய நாட்டு விதவைகளின் வாழ்க்கை நரக வாழ்க்கையிலும் கொடியதாய், எண்ணற்ற துன்பங்களுக்கு இடமாகிறது. வீண் சந்தேகம், பொறாமை, குருட்டுக் காமம் ஆத்மாவில்லாத - இதயமில்லாத அடிமைகளாக நடத்தவேண்டுமென்ற கொள்கை இவற்றைக் கொண்டே நம்மவர்களில் சில ஆடவர்கள் "பெண்களுக்கு மறுமணம் கூடாது" என்று சட்டம் போட்டார்கள். அதனுற்றான், மனைவியில்லாத கிழவர்கள் சிறு பெண்களை மணம் புரிய நேரிடுகிறது.

விதவைகள் எந்தப் பருவத்திலும் தமது வயதுக்குத் தகுந்த ஆடவரை மறுமணம் செய்து கொள்ளலாம். அப்படியே ஆடவர்கள் எந்தப் பருவத்திலும் தமது வயதுக்குத் தக்க பெண்களை மறுமணம் செய்து கொள்ளலாம். இந்த ஏற்பாடு அமுலுக்கு வரவேண்டும்.

பூசாரிகளுக்கு ஏமாற வேண்டாம்!

கோயில் குருக்களுக்கு இனி நம்முடைய தேசத்து ஜனங்கள் ஒத்து நடக்க வேண்டுமானுல், ஜனங்களிடம் பூசாரிகள் எதையும் மறைக்காமல், எந்த விஷயத்திலும் மக்களை ஏமாற்ருமல் உண்மையைச் சொல்ல வேண்டும்.

கும்பிடுவோர் நித்திய அடிமைகளாகவும், தேவாம்சம் உடையோர் தாமாகவும் இருந்தால் நல்லதென்று பூசாரி யோசனைபண்ணுகிருன். பிறரை அடிமை நிலையில் வைக்க விரும்புவோரிடம் தெய்வாம்சம் ஏற்படாது. அப்படியிருக்க பல பூசாரிகள் தம்மிடம் தெய்வாம்சம் இருப்பதுபோல நடித்துப் பொதுமக்களை வஞ்சித்துப் பணம் பிடுங்குகிருர்கள். கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள். எத்தனை காலம் ஒரு மோசக்கார மனிதனை மூடிவைத்து அவனிடம் தெய்வம் இருப்பதாகக் கூறமுடியும்? ஆகையால், இந்தப் பூசாரிகளுடைய சாயம் சீக்கிரம் வெளுத்துப் போகிறது. மக்கள் பூசாரிகளை அவமதிப்பாக நடத்தி பழைய மாமூலை உத்தேசித்து கல்லை மாத்திரம் கும்பிடுகின்றுர்கள். அப்படிப்பட்ட கல் வரங் கொடுக்கவே கொடுக்காது.

யோக்கியதை இல்லாத பூசாரி தொட்ட மாத்திரத்தில் கடவுள் அந்தக் கல்லை விட்டுப் போய்விடுவார். அது மறுபடி சாதாரண வஸ்தா உருவையின் ஸ்தானத்திற்கு வந்து சேர்ந்து விடும்.

கோவிலுக்குப் போனுலும் சரி, போகாவிட்டாலும் சரி; தெய்வத்தைக் கும்பிட்டாலும் சரி, கும்பிடாவிட்டாலும் சரி; பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினுல் செய்வம் அருள் புரியும்.

தமிழா, இதை மறவாதே!

மூட நம்பிக்கைகளை ஒழித்து விடுங்கள்!

நமது மக்களிடையே இந்த நேரம் வரை நடைபெறும் மூட பக்திகளுக்குக் கணக்கு வழக்கே கிடையாது. இதனால் நம்மவர்களின் காரியங்களுக்கும், விவகாரங்களுக்கும் ஏற்படும் தடைகளுக்கு எல்லை இல்லை. இந்த மூட பக்திகளிலே மிகவும் தொல்லையான அம்சம் யாதெனில், எல்லாச் செயல்களுக்கும் நாள், நட்சத்திரம், லக்கினம் முதலியன பார்ப்பதே யாகும். க்ஷவரம் செய்து கொள்ள வேண்டுமென்றால், அதற்குக்கூட நம்மவர் மாதப் பொருத்தம், பட்சப்பொருத்தம், நாட் பொருத்தம், நட்சத்திரப் பொருத்தம் இத்தனையும் பார்த்தாக வேண்டியிருக்கிறது.

இனி கலியாணங்கள். சடங்குகள், வியாபாரங்கள், யாத்திரைகள், விவசாய ஆரம்பங்கள் முதலிய முக்கிய காரியங்கள் பல்லாயிரத்தின் விஷயத்திலே நம்மவர்கள் மேற்படி பொருத்தங்கள் பார்ப்பதில் செலவிடும் கால விரயத்துக்கும் வரம்பே கிடையாது. சகுனம் பார்க்கும் வழக்கமும் காரியங்களுக்குப் பெரும் தடையாக மூண்டிருக்கிறது. இவற்றால் நேரம் பாழாவதோடு, பொருள் அழிவுகளும் எவ்வளவு ஏற்படுகின்றன என்பதை நம்மவர் கவனிப்பதே கிடையாது. சகுனம் பார்ப்பதினால் காரிய நஷ்டம் மாத்திரமே உண்டாகிறது. நாட் பொருத்தம், லக்கினப் பொருத்தம் முதலியன பார்க்குமிடத்தே காரிய நஷ்டமேயல்லாமல் அவற்றைப் பார்த்துச் சொல்லும் சோதிடர்க்கு வேறு பணம் செலவாகிறது.

நிலமனைத்தும் பொதுவுடைமை!

சில மூடர்கள் பிச்சைக்காரரை வேட்டையாடுவது புத்திக் கூர்மைக்கு அடையாளம் என்று நினைக்கிறார்கள். பிச்சைக்காரன் வந்தால், "ஏண்டா, தடிபோல் இருக்கிறாயே! பிச்சை கேட்க ஏன் வந்தாய்? உழைத்து ஜீவனம் பண்ணு" என்று வைது துரத்துவார்கள். "உழைத்து ஜீவனம் பண்ணு" என்று வாயினால் சொல்லி விடுவது எளிது. உழைக்கத் தயாராக இருந்தாலும், வேலை அகப்படாமல் லட்சாதி லட்சம் பேர் கஷ்டப்படுகிறார்கள் என்ற விஷயம் மேற்படி நாகரீக வேட்டை நாய்களுக்குத் தெரியாது. பிச்சைக்கு வருவோரில் பலர் மிகவும் கெட்ட சோம்பேறிகள் என்பதும் உண்மைதான். பிச்சைக்காரன் மாத்திரந்தானா சோம்பேறி? பணம் வைத்துக் கொண்டு வயிறு நிறைய தின்று தின்று யாதொரு தொழிலும் செய்யாமல் தூங்குவோரும் சோம்பேறிகள்தான்.

எல்லா உயிர்களும் மரணத்திற்கு அஞ்சுகின்றன. ஆனால், மரணம் வறுமையிலும் பெருந்துன்பம் என்று உணர்ந்த ஏழை

கள் மாத்திரமே "தெய்வமே, எனக்கொரு சாவு வராதா?" என்று சில சமயங்களில் வேண்டுகின்றனா. ஏழ்மையே இல்லாமல் செய்துவிட முடியும். வயிற்று ஜீவனத்துக்கு வழி இல்லாமல் யாருமே இருக்கக் கூடாது.

திருட்டு, கொள்ளை முதலிய கொடுமைகளை அதிகாரமுடையவர்களும், பணக்காரர்களுமே அதிகமாகச் செய்கின்றனர். ஏழைகள் செய்யும் அநியாயம் குறைவு. இதைக் கருதியே, புரூதோம் என்ற பிரஞ்சு தேசத்து அறிஞர் "உடைமையாவது களவு" என்றார்.

சிலருக்கு சோறு மிதமிஞ்சி இருக்க பலர் தின்னச் சோறு இல்லாமல் இருக்கும் கொடுமையைத் தீர்த்துவிட வேண்டும். நன்செய், புன்செய், தோப்பு, துரவு, சுரங்கம், நதி அருவி, குப்பை, செத்தை, தரை - கடவுளுடைய சொத்தில் நாம் வேலி கட்டக்கூடிய பாகத்தை யெல்லாம் - சிலர் தங்களுக்குச்சொந்தம் என்று வேலி கட்டிக் கொண்டனர். பலர் ஆகாசமே உடைமை; வாயுவே ஆகாரம் என்ற நிலையில் வாழ்கின்றனர். இந்தநிலைமைநீங்கி நிலமனைத்தும் எல்லோருக்கும் பொதுவென்று அரசாங்க விதி மூலம் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

குருக்களின் கட்டுப்பாட்டை மதியாதே!

தனக்குத் தானே நாயகனாக இருக்கும் உரிமை எல்லா மனித உரிமைகளிலும் பெரிது. ஆனால், இந்நாட்டிலே அந்த உரிமை நூல்களாலும் பழமொழிகளாலும் கிரியைகளாலும், சடங்குகளாலும் மறுக்கப்பட்டிருக்கின்றது. இந்த நாட்டில் மனிதனுடைய புத்தி நல்வழியில் செல்லாமலிருக்கக் கிரியைகளாலும் சாத்திரங்களாலும் கையையும், காலையும் கட்டிப்போட்டு விட்டார்கள். அடிகோணமல் காக்குமாறு பாதைகளை அழித்து விட்டார்கள். கடவுளின் பெயரைச் சொல்லி மனிதனை மனிதன் கீழ்ப்படுத்தி அவமதிக்கும்படி செய்து விட்டார்கள். இப்படிப்பட்ட நாடு, அடிமைகளை உற்பத்தி செய்வதற்கு நல்ல தொழிற்சாலை ஆயிற்று. உலக மாறுதல்களைக் காண முடியாதவாறு கண்களை மூடிக்கொண்டாலொழிய, நம்முடைய 'அற்புதமான' ஆசாரங்களைத் தவறாமல் கடைப்பிடிப்பது சாத்தியமில்லை.

1. ஒருவன் மற்றொருவனைக் கஷ்டப்படுத்தினால், இருவருமே கெட்டழிவர் என்று சமயம் சொல்லுகிறது.

மகள் விதவையாகிப் பட்டினி கிடக்கும்போது, இன்ன திதியில் அவளுக்குத் தாகத்திற்குத் தண்ணீர் கொடுத்தால் பெற்றோர்களுக்குப் பாவம் என்று குருக்களின் கட்டுப்பாடு கூறுகிறது.

2. பிறர் மீது இரக்கம் காட்டி உதவுவதால் தனது பாவத்தைப் போக்கிக் கொள்ளலாம் என்று சமயம் கூறுகிறது.

கிரகணத்தன்று ஒருவன் இன்ன நீரில் மூழ்கிக் குளித்தால் தன் பாவம் தீருவதுடன் பதினைன்கு தலைமுறை பிதுர்கள்செய்த பாவமும் தீரும் என்று கட்டுப்பாடு கூறுகிறது.

3. மலைகளையும் கடல்களையும் கடந்து போய் இவ்வழகிய உலகத்தின் வியப்புகளைக் கண்டு களிக்க வேண்டும் என்று சமயம் சொல்லுகிறது.

கடலைக் கடந்தவன் மண்ணில் புரண்டு பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று கட்டுப்பாடு சொல்லுகிறது.

4. எக்குடி பிறந்தாலும் உண்மை யுள்ளவன் தொழத் தக்கவன் என்று சமயம் கூறுகிறது.

பிராமணனுகப் பிறந்தவன் அயாக்கியனுகை இருந்த போதிலும் அவன் பாததூளை பிறர் சிரத்தில் தரிக்கலாம் என்று கட்டுப்பாடு சொல்லுகிறது.

சுருங்கச் சொன்னல், சமயம் விடுதலையைப் போதிக்கிறது. குருக்களின் கட்டுப்பாடு அடிமை நிலையை வியந்து கீர்த்தனம் பாடுகிறது.

வறுமை தொலைக; இன்பம் எய்துக!

தமிழா, பயப்படாதே! ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாத்திரங்களை யெல்லாம் தமிழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடுசெய்!

சாதி வேற்றுமைகளை வளர்க்காதே! "சாதி இரண்டொழிய வேறில்லை" என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்.

தமிழா, பெண்ணை அடிமையென்று கருதாதே! முற்காலத்துத் தமிழர் மனைவியை "வாழ்க்கைத் துணை" என்றனர். ஆத்மாவும் சக்தியும் ஒன்று, ஆணும் பெண்ணும் சமம்.

தமிழா, உனது வேலைகள் அனைத்திலுமே பொய்க் கதைகள் மிஞ்சிவிட்டன. உனது மதக் -கொள்கைகள், வைதீக நடை எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலை தூக்கி ஆட இடங்கொடுத்து விட்டாய். இவற்றை நீக்கிவிடு.

தமிழா, உனது சாதியிலே உயர்ந்த அறிஞர்கள், தெய்வங் கண்ட கவிஞர்கள், சங்கீத வித்வான்கள், கை தேர்ந்த சிற்பிகள், பலநூல் வல்லுநர்கள், பல தொழில் வல்லுநர்கள் தோன்றுகிருர்கள். அச்சமில்லாத அறவோர்கள் பெருகுகிருர்கள். கண்களை நன்றாகத் துடைத்து விட்டு நான்கு பக்கங்களிலும் பார்! ஒரு நிலைக்கண்ணாடியிலே போய்ப் பார்!

தமிழா, வீட்டிலும் வெளியிலும் தனிமையிலும் கூட்டத்திலும் எதிலும் எப்போதும்

(24-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியருக்குக் கடிதம்

ஆந்திரர்களின் ஆதிக்க வெறி

அன்புடைய ஐயா,

சித்தூர் ஜில்லா, தமிழர்களுக்கு ஆந்திரர்கள் இழைத்து வரும் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஜில்லா போர்டு பள்ளிகளில், நடைபெற்றுவரும் தமிழ் வகுப்பை மறு உத்திரவுவரை எடுக்கக்கூடாதென்ற சென்னை அரசினரின் ஆணையை ஜில்லா போர்டு தலைவர் இதுவரை அமுல் நடத்தவில்லை. போர்டு பள்ளிகளில் தமிழ் வகுப்புகள் எடுக்கப்பட வேண்டுமென்று ஜில்லா போர்டு தலைவர் முன்னர் விட்டிருந்த உத்தரவே இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அரசினரின் ஆணையை பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு நினைவூட்டி தமிழ்ப் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டினால், 'ஜில்லா போர்டு தலைவரின் உத்தரவன்றியில் வேறு எவரது உத்தரவுக்கும் நாங்கள் கீழ்ப்படிய மாட்டோம்' என்கின்றனர்.

மற்றும், ஆற்காடுகுப்பம் பள்ளியில் ஆசிரியர்களாக இருக்கும் இருவரை தமிழ்மாக் களின் கிளர்ச்சிகளுக்குத் துணை புரிகிறார்கள் என்ற பொய்க்குற்றம் சாட்டி தொலை தூரத்திலுள்ள வேற்றூருக்கு மாற்றி விட்டனர். ஒரு ஆசிரியரை வேலையிலிருந்தே நீக்கிவிட்டனர். இம்மாதிரி ஒவ்வொரு துறையிலும் சித்தூர் ஜில்லாவிலுள்ள ஆந்திரர்கள் தமிழர்களுக்கு கொடுமை இழைத்து வருகின்றனர். சென்னையிலுள்ள தமிழ்த் தலைவர்களும் தமிழ் அமைச்சர்களும் கண் விழித்து உடனடியாக ஒரு விசாரணைக் கமிட்டியை அமர்த்தி சித்தூர் ஜில்லா தமிழர்களுக்கு ஆந்திரர்கள் இழைத்து வரும் அநீதிகளைக் குறித்து விசாரணை நடத்த வேண்டும்.

இங்ஙனம்
அல்லற்படும் தமிழன்
திருத்தணிகை
21—8—50

(23-ம் பக்கத் தொடர்ச்சி)

நேர்மையாக இரு. நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறரும் உன்னை வஞ்சிக்க இடந்தரலாகாது. பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்றவரையும் தடுக்க வேண்டும்.

தமிழா, எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை; எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. "முந்திய சாத்திரந்தான் மெய்; பிந்திய சாத்திரம் பொய்" என்று தீர்மானம் செய்து கொள்ளாதே. காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஒரு கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? 'தகப்பன் வெட்டிய கிணறு என்று உப்பு நீரைக் குடிக்கின்றனர் மூடர்கள்' என்று பஞ்ச தந்திரம் நகைக்கிறது.

தமிழா, உனது நோய்களெல்லாம் தீருக; வறுமை தொலைக; இனிமையும் அழகுமுள்ள பொருள்களெல்லாம் உனக்கு வசப்படுக. நீ எப்போதும் இன்பம் எய்துக!

திருப்பத்தூர்
தமிழரசுக் கழக மாநாடு

திருப்பத்தூர் (வ. ஆ.) தமிழரசுக் கழக முதலாவது மாநாடு 10—9—50-ல் நடைபெறும்.

தலைவர் : கவிஞர் கா. மு. ஷெரீபு

தமிழரசுக் கொடி உயர்த்தல் : நாஞ்சில் மணி

★

படத்திறப்பு விழாக்கள்

திருவாளர்கள் கி. ஜனார்த்தனம், க. அ. ச. ரகுநாயகம் பி.ஓ.எல். (ஆனர்ஸ்), வடக்கெல்லைக் காவலர் ஆசிரியர் மங்கலங்கிழார், தங்கவயல் எஸ். ஐ. அருள்தாஸ், திருச்சி ந. சஞ்சீவி பி.ஓ.எல். (ஆனர்ஸ்) ஆகியோர் முறையே கட்டபொம்மன், காந்தியடிகள், வ. உ. சி., திருப்பூர் குமரன், பாரதியார் ஆகிய தியாகிகளின் திருவுருவப் படங்களைத் திறந்து வைப்பார்கள்.

இசை விருந்து

இசையுலக இளம்பரிதி எம். எம். மாரியப்பா

★

நாடக ஆசிரியர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி இசையரங்கைத் துவக்கிவைப்பார்.

திரு. ம. பொ. சி. தலைமை தாங்குவார்

★

பார்வையாளர் கட்டணம் உண்டு

வரவேற்புக் குழுவினர்

தேசீயவாதிகளே சிந்தியுங்கள்!

'தேசிய வாதி'

★

இந்தியா, வெளிநாட்டவரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று விட்டது. என்றாலும், அதன் உள்நாட்டுப் பிரச்னைகள் இன்னும் தீர்ந்தபாடில்லை. ஆம்; பிரிட்டிஷார் ஆண்ட காலத்தில், இந்திய மாகாணங்களிடையே இருந்து வந்த பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் - எல்லைக் கோடு பற்றிய சர்ச்சைகள் - இந்தியா சுதந்தரம் பெற்று மூன்றாண்டுகள் ஆகியும் இன்னும் தீர்க்கப்படவில்லை. இதன் விளைவாக, இந்திய தேசிய உணர்ச்சிக்கும் மொழிவழி இனப் பற்றுக்கும் மோதல் ஏற்பட்டு வருகிறது.

வங்க மொழி பேசும் தேசீய இனத்தார், சிதைந்து கிடக்கும் வங்க நாட்டை ஒன்றாகச் சேர்த்து, அதில் சுதந்தர சோஷியலிச **வங்கக் குடியரசை** ஸ்தாபிக்க விரும்புகின்றனர்.

மகாராஷ்டிர தேசிய இனத்தார் சிதறிக் கிடக்கும் மராத்திய பகுதிகளை, ஐக்கியப்படுத்தி அதில் **மராத்தியக் குடியரசை** அமைக்க மனம் ஒப்பிப் பணி புரிகின்றனர்.

பம்பாய், சென்னை ஆகிய மாகாணங்களிலும் ஐதராபாத் சமஸ்தானத்திலும் ஒடுங்கிக் கிடக்கும் கன்னடப் பகுதிகளையும் மைசூரையும் ஒன்று சேர்த்து **ஐக்கியக் கன்னடம்** அமைத்து அரசாள விரும்புகின்றனர், கன்னட தேசிய இனத்தார்.

சென்னை, ஒரிசா ஆகிய மாகாணங்களிலும், ஐதராபாத் சமஸ்தானத்திலுமாக சிதறிக் கிடக்கும் தெலுங்குப் பிரதேசங்களை இணைத்து **'விசால ஆந்திரம்'** காண விரும்புகின்றனர், ஆந்திர தேசீய இனத்தார்.

வட திருவிதாங்கூர், கொச்சி, மலபார் ஆகிய மூன்றையும் ஒன்றாக்கி, **ஐக்கிய கேரளம்** என்ற பெயரில் அரசாளத் துடிக்கின்றனர், கேரள தேசீய இனத்தார்.

பிரெஞ்சுத் தமிழ்ப் பிரதேசங்கள், சென்னை மாகாணத் தமிழ் ஜில்லாக்கள், கொச்சி - திருவிதாங்கூர், மைசூர் முதலிய சமஸ்தானங்களிலுள்ள தமிழ் வழங்கும் பகுதிகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து வடவேங்கடம்--தென் குமரிக்கு இடைப்பட்ட **புதிய தமிழகத்தை** உருவாக்கி அதில், தமிழரசு காண முயல்கின்றனர் தமிழ் தேசீய இனத்தார்.

சுருங்கச் சொன்னால், சுதந்தர இந்தியாவில் மொழிவழி தேசீய இனங்கள் ஒவ்வொன்றும் தத்தம் தாயகத்தில் தனியரசு காணத் துடிக்கின்றன. இந்த சுதந்தரக் கோரிக்கைகளை காங்கிரஸ் மேலிடத்தார் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டிருந்தும், நடைமுறையில் அமுல் நடத்த தயங்குகின்றனர்.

மொழிவழி நாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சியை நடத்தி

வோர் யாவர்? இந்திய தேசியத்தின் எதிரிகளா? இல்லை. பாரத நாட்டின் விடுதலைப் போரில் பங்கு கொண்டு வெற்றி கண்ட வீரர்கள்தான் இன உரிமைக் கிளர்ச்சிக்கும் தலைமை தாங்குகின்றனர்.

1906-ம் ஆண்டிலிருந்து 1950-ம் ஆண்டுவரை தமிழ் நாட்டுத் தேசிய இயக்கத்தில் தமிழ் மணமே கமழ்ந்திருந்தது. செக்கிழுத்து சிந்தை நொந்த நேரத்திலும், செந்தமிழில் கவி இயற்றிய சிதம்பரனார்—பட்டி தொட்டிகள் தோறும் சுற்றி அலைந்து பண்பட்ட தமிழால் காந்தீயத்தைப் பரப்பிய திரு. வி. க. ஆகியவர்களன்றோ அந்நாளில் தேசியத் தலைவர்களாகத் திகழ்ந்தனர்.

புரட்சி வீரர் வ. வெ. சு. ஐயர், ஆங்கிலக் கொடுங்கோலின் அடக்குமுறைக்குத் தப்பி அயல் நாடுசென்றபோதும் தம்முடன் கொண்டுசென்ற பொருள்கள் யாவை? துப்பாக்கியன்று; வெடி குண்டுமன்று. திருக்குறளும் கம்பராமாயணமும் ஆகும். இன்பத் தமிழிலே வெறியூட்டி, ஏகாதிபத்திய பரணி பாடிய பாரதியாரும் தேசிய வாதி அல்லவா?

ஆம், காங்கிரஸ் மகாசபை நாட்டு மொழிகட்கு மதிப்புத் தந்த பிறகுதான் தமிழ் புத்துயிர் பெற்றது; பாரதி போன்ற புலவர்கள் தோன்றினர்.

அன்று காங்கிரஸ் ஏற்றி வைத்த மொழிப்பற்று என்னும் அணையா விளக்கின் ஒளியில்தான் இன்று மொழிவழி தேசிய இனங்களின் அரசுரிமைப் படை பவனி வருகிறது. இதைக்கண்டு காங்கிரஸ் அஞ்சுவானேன்? கற்றுக் கொடுத்தவர்களே கலங்கினால், கடமையைச் செய்ய வேறு யார் இருக்கின்றனர்!

வாக்குறுதி எங்கே?

இந்திய மாகாணங்களை, மொழி வழி நாடுகளாகத் திருத்தி அமைக்க வேண்டும் என்ற கொள்கையை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது மட்டுமன்று; அதை நிறைவேற்றி வைக்குமாறு பிரிட்டிஷ் ஆட்சியை இடைவிடாது வற்புறுத்தியும் வந்திருக்கிறது.

1909 முதல் 1937 வரை பிரிட்டிஷாரால் தரப்பட்ட மின்டோ - மார்லி சீர்திருத்தம், மான்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தம், சைமன் கமிஷன் யாதாஸ்து ஆகியவற்றை காங்கிரஸ் அங்கீகரிக்க மறுத்ததற்கான காரணங்களில், அவற்றில் மொழி வழி மாகாணம் பிரிக்கப்படுமென வாக்குறுதி தரப்படவில்லை என்பதும் ஒன்றாகும்.

1909 முதற்கொண்டே ஆந்திரர்கள் தனிமாகாணக் கிளர்ச்சியை இடைவிடாது நடத்தி வந்துள்ளனர். பிரிவினைப் பிரசாரத்தை நடத்துவதற்கென்றே 1912-ல் கொண்டா வேங்கடப்பையா போன்ற தேசீயவாதிகளால், ஆந்திர மகாசபை தோற்றுவிக்கப்பட்டது. இந்த முயற்சிகளுக்கெல்லாம் காங்கிரஸ் மகாசபை ஆரம்ப முதலே ஆதரவு காட்டி வந்துள்ளது.

1936-லும் 1946-லும், காங்கிரஸ் மகாசபை வெளியிட்ட தேர்தல் பிரகடனங்களிலும், காங்கிரஸ் தலைவர்கள் பதவிக்கு வந்தால் மொழிவாரி மாகாணப் பிரிவினை நிறைவேற்றப்படும் என வாக்குறுதி தந்திருக்கிறது. ஆனால், இன்றைய நிலைமை என்ன?

பதவிக்கு வருமுன் மொழி வழி நாட்டுப் பிரிவினையை அங்கீகரித்த காங்கிரஸ் தலைவர்கள் பதவிக்கு வந்தபின் அதை அமுல் நடத்தத் தயங்குகின்றனர். புதிய அரசியல் அமைப்பிலும் மொழிவழி நாட்டுப் பிரிவினை நிறைவேற்றப் படுமென தெளிவாகக் கூறப்படவில்லை. இது அறமாகுமா? அரசியல் நெறியாகுமா? காந்திய வழியாகுமா?

காங்கிரஸின் தயக்கத்தைச் சாதகமாகக் கொண்டு மதவாதிகளும், முதலாளிக் கூட்டத்தாரும் தேசீய இனங்களின் உரிமைக் கிளர்ச்சிக்கு எதிராகப் பிரசாரம் செய்து வருகின்றனர். இந்து மகாசபை, மொழி வழி நாட்டுப் பிரிவினையை ஏற்க மறுப்பதோடு, அதற்கு எதிராகவும் பிரசாரம் செய்து வருகிறது. காரணம் என்ன? தமிழர், ஆந்திரர், கன்னடர், மராட்டியர், வங்காளியர் என்று மொழிவழியே இன உணர்ச்சி வளர்ந்துவிட்டால், இந்து - முஸ்லிம்களிடையே வேற்றுமை மறைந்து ஒற்றுமை வளரும்; அப்புறம், "அகண்ட இந்துஸ்தான்" போன்ற கோஷங்களும் குழி தோண்டிப் புதைக்கப்படும் என்பதே ஆகும். மற்றும், மொழிவழி இன உணர்ச்சி வளர்ந்தால் மதத்தின் பேரால் அரசியலில் புகுந்து அனர்த்தம் செய்ய மக்கள் இடந்தர மாட்டார்கள் அல்லவா? ஆகவே, மதவாதிகள் மொழி வழிப் பிரிவினையை எதிர்ப்பதில் வியப்பொன்றும் இல்லை.

சுதந்திர இந்தியாவைத் தங்கள் சுரண்டல் பூமியாகக் கொண்டுவிட்ட வட இந்திய முதலாளிக் கூட்டமும் மொழி வழி நாட்டுப் பிரிவினையை எதிர்க்கிறது.

புள்ளி விபரம் பேசுகிறது!

சென்னை மாகாணத்தை மொழி வழி நாடுகளாகப் பிரித்தால், தனியரசு நடத்த சக்தியற்ற சிறு நாடுகளாகி விடுமே என்று சில அரசியல் வாதிகள் அங்கலாய்க்கின்றனர். இது, ஆராய்ச்சியற்ற பேச்சு.

தெற்கு, கிழக்கு, தென்மேற்கு பகுதிகளில் கடலால் சூழப்பட்டும், வடக்கில் வேங்கட மலையை அரணாகக் கொண்டும் அமைந்துள்ளது தமிழகம். இந்தியாவில் உள்ள வேறு பல மாகாணங்களை (ஸ்டேட்களை) விட, பெரிய நிலப்பரப்புடையது என்பதைப் பின்வரும் புள்ளி விவரங்கள் புலப்படுத்தும்:

நாடுகள்		சதுர மைல்
தமிழகம்	...	56,870
அசாம்	...	50,296
மத்திய பாரதம்	...	46.353
கி. பாஞ்சாலம்	...	37,058

நாடுகள்	சதுர மைல்
ஒரிசா	... 32,198
மைசூர்	... 29,458
மே. வங்கம்	... 27,748
சௌராஷ்டிர யூனியன்	... 17,725
பாட்டியாலா, கி. பஞ்சாப் சமஸ்தானங்களின் யூனியன்	... 10,099
திருவிதாங்கூர் - கொச்சின்	... 9155

இந்தப் புள்ளி விவரத்திலிருந்து, சென்னை மாகாணத்தைப் பிரித்தால் மொழி வழி நாடுகள் சின்னஞ் சிறியனவாகி சீரழிந்து விடுமே என்று புலம்புவோர்க்கு உண்மை புலனாகும் என்று நம்புகிறோம்.

தமிழகத்தின் மக்கள் தொகையும் அந்நாடு தனித்து வாழ்வதற்குப் போதுமானதாக இருக்கிறது. புதிய தமிழகத்தின் மக்கள் தொகை சுமார் மூன்று கோடியாகும். மக்கள் தொகையிலும் தமிழகத்தைவிட குறைவாக உள்ள மாகாணங்கள் பல உண்டு. அவை வருமாறு :—

நாடுகள்	மக்கள் தொகை
தமிழகம்	2,81,40,121
மே. வங்கம்	2,45,20,000
பம்பாய்	2,08,49,840
ஐதராபாத்	1,63,38,000
மத்திய பிரதேசம்	1,63,13,584
ராஜஸ்தான்	1,31,00,000
கி. பஞ்சாப்	1,21,72,919
ஒரிசா	87,29,544
அஸ்ஸாம்	74,74,004
மைசூர்	73,29,000
மத்திய பாரதம்	72,00,000
திருவிதாங்கூர் - கொச்சி	65,00,000
காஷ்மீர்	40,21,000
பாட்டியாலா - கி. பஞ்சாப் சமஸ்தான யூனியன்	34,00,000
சௌராஷ்டிரா யூனியன்	29,00,000

இவ்வாறு குறைந்த நிலப்பரப்பையும், குறைந்த மக்கள் தொகையையும் கொண்ட பிரதேசங்கள் எல்லாம் தனி அரசுகளாக (ஸ்டேட்களாக) புதிய அரசியல் அமைப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அப்படி இருக்க, தமிழகம் மட்டும் தனியாகப் பிரிந்தால் வளமாக வாழ முடியாது என்று கூறுவோரின் அரசியல் ஞானத்தை என்னென்பது ?

வாதமல்ல ; வரலாறு

மொழி வழி நாட்டுப் பிரிவினை இனித்தான் துவக்கப்பட இருப்பதாக சில அரசியல் வாதிகள் நம்புகின்றனர் போலும்! உண்மையில், மொழி வழி நாட்டுப் பிரிவினை 1874-லேயே-பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே-துவக்கப்பட்டு விட்டது. இது எமது வாதமல்ல; வரலாறு காட்டும் வாய்மை. கிழக்கிந்திய கம்பெனியார் ஆண்ட காலத்திலிருந்து 1874-ம் ஆண்டுவரை இந்தியாவில் மூன்று மாகாணங்களே இருந்து வந்தன. அவை சென்னை, பம்பாய், வங்காளம் ஆகும். 1874-ல் தான் முதன் முதலாக வங்காளத்திலிருந்து அஸ்ஸாம் பிரிக்கப்பட்டது. மீண்டும் 1905-ல் வங்கத்திலிருந்து பீகாரும், ஒரிசாவும் பிரிக்கப்பட்டன. இது போன்றே, பம்பாயிலிருந்து பாஞ்சாலம்

(34-ம் பக்கம் பார்க்க)



டாக்டர். மு. வரதராசனார்

அன்புள்ள எழில்!

உன்னுடைய தமிழ்ப்பற்றையும் தமிழ் நாட்டுப் பற்றையும் போற்றுகிறேன்; வாழ்த்துகிறேன். ஆனால், இன்றைய கடிதத்தில் நீ எழுதியது போன்ற வீண் கனவு மட்டும் வேண்டாம். மேடைப்பேச்சு நம்முடைய உணர்ச்சி வெள்ளத்திற்குப் பெரிய வாய்க்காலாக இருந்து ஆத்திரத்தைத் தணித்து வற்றச் செய்து நம்மைச் சோம்பேறிகளாக்குவது போல், இப்படிப்பட்ட வீண் கனவுகள் நம்மை வீணர்களாக ஆக்காமலிருக்க வேண்டும் என்ற எண்ணத்தால் இதைக் குறிப்பிடுகிறேன். வேறொன்றும் தவறாக எண்ண வேண்டாம்.

• •

"நான் சர்வாதிகாரியாக ஏற்பட்டால், திருக்குறள் ஓதாத திருமணம் தமிழ்நாட்டில் செல்லுபடி ஆகாது என்றும், தேவாரம், திருவாசகம் பிரபந்தம் முதலான தமிழ் மறை ஓதாத கோயில்கள் தமிழ் நாட்டில் திறந்திருக்கக் கூடாது என்றும், தமிழில் உத்திரவு அனுப்பத் தெரியாத பட்டதாரிகள் தமிழ் நாட்டில் அதிகாரிகளாக இருக்கக் கூடாது என்றும், தமிழ் நாட்டுக் கவர்னரும் தமிழில் கையெழுத்து இடவேண்டும் என்றும் ஆணையிடுவேன்" என்ற வீரமான எழுத்துக்களை உன் கடிதத்தில் பார்த்ததும் நானும் சோர்வு நீங்கியவனாய்த் தலை நிமிர்ந்த தமிழனாய் எழுந்து உட்கார்ந்தேன். ஆனால் சிறிது நேரம் எண்ணிப் பார்த்தபிறகு தான், உனக்கு ஏன் இந்த வீண் கனவு என்ற எண்ணம் வந்தது. மறுபடியும் சொல்கிறேன். உன் மொழிப் பற்றையும் நாட்டுப் பற்றையும் போற்றுகிறேன். ஆனால் உணர்ச்சி வெள்ளம் மட்டும் இருந்தால் போதாது. அது என்றைக்கேனும் ஒருநாள் வடிந்து வற்றிவிடும். வற்றாத ஊற்று உன் உள்ளத்தில் இருக்கட்டும்; செயல்திறன் வளரட்டும்.

நான் எதை வீண் கனவு என்று குறிப்பிடுகிறேன், தெரியுமா? திருக்குறள் ஓதியே திருமணம் நிகழவேண்டும், தமிழ் நாட்டுக் கோயில்களில் உத்தமர்களின் தமிழ்ப்பாட்டு முழங்க வேண்டும், அதிகாரிகள் தமிழை மதிப்பவர்களாக இருக்க வேண்டும், கவர்னர் தமிழில் கையெழுத்து இடவேண்டும் என்னும் இவைகளை ஒருகாலும் வீண்கனவு என்று ஒதுக்கவே மாட்டேன். இது உனக்கே தெரியும். தமிழுக்கோ தமிழ் நாட்டுக்கோ பகைவனாக இருப்பவன்தான், இந்த நல்லெண்

ணங்களை வீண் கனவு என்று குறைகூறுவான். நம் தாயை நாம் வழிபட்டு, நம் குடும்பக் கடமையை நாம் ஆர்வத்தோடு செய்யும்போது, இதைத் தவறு என்றும் குறுகிய நோக்கம் என்றும் ஒருவன் குறுக்கிடுவானுனால், அவனைப் பகைவன் என்று ஒதுக்குவதே முதல் கடமையாகும்.

கொடுத்தும் கொளல்வேண்டும்
மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை

என்று நம் தலைவர் திருவள்ளுவர் ஆணையிட்டது இப்படிப்பட்ட பகைவர்களைக் கருதித்தான். அறத்துப்பால் மட்டும் எழுதினால் தமிழர்கள் வாழத் தெரியாதவர்களாய்த் திகைத்துச் சீரழிவார்கள் என்று எண்ணித்தான், திருவள்ளுவர் பொருட்பாலையும் எழுதினார். அறத்துப்பாலைவிட விரிவாக, இரண்டு மடங்கு உள்ளதாகப் பொருட்பாலை எழுதினார். 'இன்னா செய்யாமை' என்று 'அஹிம்சை'யை அறத்துப்பாலில் வற்புறுத்தியவர், 'பகைமாட்சி' 'உட்பகை' என்ற பகுதிகளைப் பொருட்பாலில் விளங்கிய காரணம் அதுதான். உலகம் எப்படிப்பட்டது என்பது திருவள்ளுவர்க்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் இவ்வளவு தெளிவாகப் பொருட்பாலை எழுத முடிந்தது.

தம்பி! நீ இன்னொன்று கவனித்திருப்பாய். தமிழராகிய நம்மிடம் ஒரு பெருங் குறை இருந்து வருகிறது. அது வேறொன்றும் அல்ல; பிறருடைய சொல்லால் மயங்கும் பேதைமை நமக்கு மிகுதியாக இருக்கிறது. மற்றவர்கள் இதைத் தெரிந்து கொண்டு தான், உயர்ந்த சொற்களைத் திரும்பத் திரும்பச் சொல்லித் தமிழரை ஏமாற்ற முடிகிறது. சாதி வேண்டாம், சாதி ஒரு சாபக்கேடு, கடவுள் படைப்பில் எல்லோரும் சமம் என்ற உயர்ந்த பேச்சைத் தமிழரிடம் ஒருவர் பேசட்டும். கேட்ட தமிழர் சாதிப்பற்றை உடனே வெறுப்பார்; துறப்பார்; சாதி வேறுபாடு இல்லாத தூய வாழ்க்கையைத் தொடங்கிவிடுவார். காரணம் என்ன, தெரியுமா? தமிழர் நெஞ்சம் உயர்ந்த கொள்கைகளை உணர்ந்து உணர்ந்து தலைமுறை தலைமுறையாகப் பண்பட்டு வந்தது. அதனால் சொல்கிறவர் யார், உண்மையாக உணர்ந்து சொல்கிறாரா, நம்மை ஏமாற்றச் சொல்கிறாரா, அவர் சாதி வேறுபாடு பார்க்காமல் வாழ்கிறாரா என்றெல்லாம் ஆராய்ந்து பார்க்காமல், உடனே தாம் அந்தக் கொள்கையை நம்பி உணர்ந்து வாழத் தொடங்கிவிடுவார். இது நல்லது தான். சொல்லப்பட்ட உண்மையை எடுத்துக் கொள்வது எப்போதும் நல்லதுதான்.

ஆனால் சொன்னவர் யார், அவருடைய வாய்க்கும் வாழ்க்கைக்கும் ஏதாவது உறவு உண்டா என்பதையும் கொஞ்சம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இல்லையானால் ஏமாந்த வாழ்வு தான் வாழவேண்டும். இந்த ஏமாந்ததன்மையைப் பகைவர்கள் பயன்படுத்திக் கொண்டு, ஒன்றில் நன்மைசெய்து மற்

றொன்றில் நஞ்சு ஊட்டி விடுவார்கள். சாதி வேறுபாடு முதலியவை ஒழிய வேண்டியதுதான். ஆனாலும், நமக்கு அதை எடுத்துச் சொன்னவர் சாதிப்பித்தராக இருந்தால் அதையும் ஒருவாறு நினைவில் வைத்துக்கொண்டு, வாய்க்கும் வாழ்க்கைக்கும் உறவு வைக்காமல் பற்றின்றி வாழ வல்லவர் அவர் என்பதைத் தெளிய வேண்டும். இந்தத் தெளிவு இருந்தால், அவரே மற்றொருநாள் பொய் சொல்லி நம்மை ஏமாற்ற முடியாது. இன்றைக்கு சாதி முதலான வேறுபாடு வேண்டாம் என்று உபதேசம் செய்தவர், மற்றொரு நாள் மெல்ல வந்து "மொழி வேறுபாடு வேண்டாம், தமிழ் என்றும், தமிழ்நாடு என்றும் பேசுகிற குறுகிய நோக்கம் வேண்டாம்" என்று உபதேசம் செய்வார். அதைக்கேட்ட பேதைத்தமிழர் சாதியைத் துறந்து போலவே மொழிப் பற்றையும் நாட்டுப் பற்றையும் துறந்து நிற்பர்; உடனே அடுத்த மேடையில் ஏறி உன்னையும் என்னையுமே தூற்றத் தொடங்குவார். அந்த எழிலும் அவருடைய அண்ணனும் குறுகிய நோக்கம் உடையவர்கள் என்று எவ்வளவோ சொற்களைப் பொழிவார்; வீர முழக்கம் செய்வார்; உடனே அவருக்கு ஒரு படை திரளும். முதலில் உபதேசம் செய்தவர் இத்தனை யாறுதலையும் திண்ணைமேல் இருந்தபடியே காண்பார்; உள்ளத்திற்குள் எக்களிப்பார்; நம் எண்ணம் நிறைவேறியது என்று மகிழ்வார். "புறமுதுகு காட்டாத தமிழரை; இதோ என் சொல்லால் அவர்களை வீழ்த்தி விட்டேன். எதனாலும் கலங்காத தமிழரை என் சொல்லால் மயக்கி விட்டேன். ஒற்றுமையாக இருந்தவர்களைப் பிரித்து விட்டேன், இனிமேல் வெற்றி எனக்குத்தான், இனித் தமிழர்களே தமிழர்களை அழித்துக் கொள்வார்கள், நமக்குக் கவலை இல்லை" என்று அவர் தம் உபதேசத்தின் பயனைக்கண்டு களிப்பார்.

இப்படிப் பட்டவர்களால் தமிழர்கள் ஏமாந்து போகக் கூடாது. கொள்கை எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும், சொல்கின்றவர்கள் யார் என்ற ஆராய்ச்சியும் செய்ய வேண்டும். யாழின் கொம்பு வளைவானது; அம்பு நேரானது. ஆனால் யாழை வெறுத்து அம்பைப் போற்றுவது அறியாமை அல்லவா? திருவள்ளுவர்தான் இந்த உவமையைச் சொன்னவர். வாய்ச்சொல் நேர்மையானதாக இருக்கலாம்; அதைக் கொண்டு ஒருவரை நம்பிவிடக் கூடாது; அவருடைய வாழ்க்கை எப்படிப்பட்டது என்பதை ஆராய்ந்த பிறகே நம்ப வேண்டும். குறுகிய நோக்கம் வேண்டாம் என்று நமக்குச் சொல்கிறவர்கள் நம்மைவிடப் பரந்த நோக்கம் உடையவர்களா என்று பார்க்கவேண்டும். நாம் எவ்வளவோ பரந்த நோக்கமும் இரக்கமும் உடையவர்கள்; நம் பற்றெல்லாம் சில நல்ல நூல்களைப்பற்றி, சில பெரியோர்களின் பாடல்களைப்பற்றி, 'நம்மைப் பற்றி இருக்கும். அவர்களுடைய பற்று மிக மிகக் குறுகியது: எழுத்துக்களிலும்

ஒலிகளிலும் சொற்களிலும் சடங்குகளிலும் அழுத்தமான பற்று அவர்களுக்கு இருப்பதை எண்ணினல் வியப்பாக இருக்கும். 1, 2, 3 முதலான எண்களைப் பற்றி டில்லி பாராளுமன்றத்தில் நிகழ்ந்த வாதங்களை எண்ணிப்பார். உண்மை விளங்கும்.

சாதி முதலான வேறுபாடுகள் உண்மையானவை அல்ல; பொய்யானவை; தந்திரக்காரர்களால் சமூகத்தில் புகுத்தப்பட்டவை. அவற்றை ஒழிப்பது கடமைதான். ஆனல் மொழி வேறுபாடும் நாட்டு வேறுபாடும் அப்படிப்பட்டவை அல்ல; பொய் அல்ல. மொழி உண்மையாக உள்ள ஒன்று; அது கண்ணுக்கும் தெரியும், காதுக்கும் தெரியும், மூளைக்கும் தெரியும். மொழியால் இனம் அமைவதும், நாகரிகம் அமைவதும், நாடு அமைவதும், மலைகளும் ஆறுகளும் நாட்டின் அமைப்புக்குத் துணையாக இருப்பதும் உலகம் அறிந்த உண்மைகள். இவற்றை எல்லாம் பொய் என்றும் வேண்டாதவை என்றும் உபதேசம் செய்கிறவர்கள் நம்மைப்பற்றி நல்லெண்ணம் இல்லாதவர்கள். அவர்களுக்கு வேலை நம்மிடம் இல்லை. வல்லரசுகளிடம் சென்று அவர்கள் அந்த உபதேசம் செய்யட்டும். நாட்டுப் பற்றையும் இனப்பற்றையும் பொருட்பற்றையும் வல்லரசுகள் முதலில் கைவிட்டால், உலகம் ஒரு குடும்பமாக வாழும்; குறுகிய நாட்டுப்பற்று அங்கே ஒழிந்தால், அடுத்த நொடியிலேயே தமிழன் தன் முதல் பாடத்தை, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பழைய பொதுப் பாடத்தை வாழ்க்கையில் வாழ்ந்து காட்டத் தயங்க மாட்டான். அதை விட்டுவிட்டு, நம்மிடம் செய்யப்படும் போலி உபதேசம் ஏமாற்றும் நோக்கமுடையதே ஆகும். பெருஞ்செல்வன் தன்னுடைய இரும்புப் பெட்டியை ஏழெட்டுச் சாவிகளால் பூட்டி, அந்த அறையையும் சில பூட்டுக்களால் பூட்டிவிட்டு, தன் மாளிகையின் முன்புறத்தில் அகலமான திண்ணைமேல் சாய்ந்து கொண்டு, எதிர் வீட்டு ஏழையைப் பார்த்து, "டே! என்னடா! எப்போது பார்த்தாலும் அந்தப் பொத்தல் கதவை மூடியே வைத்திருக்கிருய்! எங்கள் மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா?" என்று கேட்பது போல் இருக்கிறது இது. அந்த ஏழையும் அவருடைய பரந்த நோக்கப் பேச்சைக் கேட்டு மயங்கித் தன் குடிசைக்கு இருந்த அந்த ஒரே கதவையும் எடுத்து அப்பால் வைத்தான் என்ருல், அவனைப் பேதை என்று சொல்லாமல் வேறு என்ன என்று சொல்வது? தமிழர்கள் அப்படிப்பட்ட பேதை ஆகக் கூடாது என்பதுதான் என்னுடைய கவலை. உலகம் ஒரு குடும்பமாய் அன்பாக வாழக் கற்றுக்கொள்ளும் வரையில் தமிழனுக்குத் தற்காப்பு உணர்ச்சி கட்டாயம் வேண்டும்.

அதற்கு வழி இதுதான்: தமிழர்களைச் சிறிது நேரம் உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கடித்துப் பிறகு வறண்ட பாலையில் திகைக்க விடும் போக்கை

விட்டு, அவர்களைக் கடமைப் பற்றுடைய செயல்வீரர்களாக்க வேண்டும். உன்னுடைய எழுத்தில் அந்த உணர்ச்சி வெள்ளத்தைக் கண்டதால்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். நீ சர்வாதிகாரியாக ஆவது பற்றி எனக்குத் தடை இல்லை. ஆனால், அந்தப் போதையில் மயங்கி அன்றாடக் கடமையை மறந்துவிடாதே; மற்றவர்களையும் மறக்கவிடாதே.

நீ சர்வாதிகாரி ஆவதையே வீண் கனவு என்று குறிப்பிட்டேன். தமிழரின் திருமணங்களில் திருக்குறள் ஓதுவது கனவு அல்ல; தமிழரின் கடமை. கோயில்களில் தேவாரம் முதலியன முழங்குவது கனவு அல்ல; அந்தக் கோயில்களைத் தமிழால் பாடி அவற்றின் பெருமையைக் காத்த சான்றோர்களுக்கு நன்றியுணர்வோடு ஆற்றவேண்டிய கடமை. அதிகாரிகள் தமிழில் எழுத வேண்டியதும் கனவு அல்ல; காந்தியடிகளின் கருத்துப்படி மொழிவாரி மாகாணம் அமைக்கும் உரிமை (உண்மையான சுயராஜ்யம்) பெறும் நாள் ஒன்று வரும்போது கட்டாயமாக ஏற்படப்போவது. கவர்னர் தமிழில் கையெழுத்து இடுவதும் கனவு அல்ல; வங்காளத்திற்குத் தொண்டு செய்யச் சென்ற முதுமையில் எழுபத்தெட்டாம் வயதில், அந்த நாட்டு மொழியில் கையெழுத்து இடவேண்டும் என்று வங்காளி எழுத்தைக் கற்றுக் கொண்ட காந்தியடிகளின் பெருந்தன்மையான நெறி அது.

ஆகவே, இன்று தமிழர்க்கு வேண்டியது அன்றாடக் கடமையைப் பற்றிய ஆராய்ச்சியே; மொழிப்பற்றையும் நாட்டுப் பற்றையும் செயலில் காட்டும் முறையே. நான் இப்படியானால் அப்படிச் செய்வேன், அப்படியானால் இப்படிச் செய்வேன் என்று 'ஆனால்' போட்டுப் பேசுவது இப்போது வேண்டாம். அது வெறும் போதை; உண்மை நெறி அல்ல. எண்ணிப் பார்; விளங்கும்.

உன் அன்புள்ள,

வளவன்.

(29-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லைப்புறம், சிந்து ஆகிய பகுதிகளும் தனித்தனி நாடுகளாகப் பிரிக்கப்பட்டன. இவை அனைத்தும் மொழி வழி நாடுகளே என்பதைத் தமிழ் மக்களுக்கு நினைவூட்டுகிறோம்.

1874-ல் மூன்றே மாகாணங்களைக் கொண்டதாக இருந்த பிரிட்டிஷ் இந்தியா, 1937-ல் (கமிஷனர் பிரதேசங்கள் நீங்கலாக) 11 மாகாணங்களைக் கொண்டதாகக் காட்சி அளித்தது. இந்தப் பிரிவினைகளெல்லாம் பிரிட்டிஷாரால்தான் செய்யப்பட்டன.

ஆனால், காங்கிரஸ் மகாசபை முஸ்லீக் ஆகிய அரசியல் கட்சிகள் கூட்டாகவும், தனித்தனியாகவும் இடைவிடாது வற்புறுத்தி வந்ததின் பேரில்தான் பிரிவினை செய்யவேண்டிய கட்டாயம் பிரிட்டிஷாருக்கு ஏற்பட்டது.

பிரிட்டிஷார் வெளியேறிய பின்னரும், வடக்கே மொழி வழி நாடுகளை உருவாக்கியது காங்கிரஸ் ஆட்சி. சின்னஞ் சிறு சமஸ்தானங்களையெல்லாம் ஒன்ருக்கினுர்களல்லவா? அவை யனைத்தும் மொழி அடிப்படை யில்தான் உருவாக்கப்பட்டன. ஆகவே, மொழி வழி நாட்டுப் பிரிவினை என்பது இந்தியாவில் சுமார் 70 ஆண்டுகளாக கடைப் பிடித்துவரும் நடைமுறையே யாகும். சுதந்தர இந்தியாவில், கமிஷனர் பிரதேசங்களும் மத் திய அரசினர் நிர்வாகத்தி லுள்ள பிரதேசங்களும் நீங்க லாக, 18 தனியரசுகள் (ஸ்டேட் டுகள்) இருந்து வருகின்றன. இவற்றில் 15 அரசுகள் மொழி வழிப் பட்டனவாகும். அவை பின்வருமாறு :—

நாடு	மொழி
ஒரிசா	— ஒரியா
மேற்கு வங்கம்	— வங்காளி
அஸ்ஸாம்	— அஸ்ஸாமி
பீகார்	— பீகாரி
மத்திய பிரதேசம்	— இந்தி
மத்திய பாரதம்	— இந்தி
விந்திய பிரதேசம்	— இந்தி
உத்தரப் பிரதேசம்	— இந்தி
கிழக்கு பஞ்சாப்	— பஞ்சாபி
ராஜஸ்தான்	— ராஜஸ்தானி
காஷ்மீர்	— காஷ்மீரி
மைசூர்	— கன்னடம்
கேரள யூனியன்	— மலையாளம்
சவுராஷ்டிரம்	— சவுராஷ்டிரா
பாட்டியாலா-கி. பஞ்சாப்	— பஞ்சாபி

இன்னும், பல மொழிகள் வழங்கும் அரசுகளான சென்னை, பம்பாய், ஹைதரா பாத் ஆகிய மூன்றையும் மொழி வாரி பிரித்தால், தமிழகம், ஆந் திரம், மகாராஷ்டிரம், கூர்ஜரம் ஆகிய நான்கு புதிய நாடுகள் உருவாகும். எஞ்சியுள்ள கன் னடப் பிரதேசங்கள் மைசூரோ டும், மலையாள பிரதேசம் கேரள யூனியனேடும் கலந்து விடும்.

பிரிட்டிஷ் ஆட்சி காலத் திலோ, இன்றைய காங்கிரஸ் ஆட்சியிலோ வடக்கே மொழி வழி நாடுகள் அமைத்ததால் எத் தகைய அபாயமும் ஏற்பட்ட தாகத் தெரியவில்லை பிரிக்கப் பட்ட நாடுகளின் அரசுகளும், ஆளத்திறனின்றியோ -- வாழ வளமின்றியோ அழிந்து விட வில்லை. அப்படியிருக்க, சென்னை, பம்பாய் மாகாணங் களையும் ஐதராபாத்தையும் மட் டும் மொழிவாரி பிரிப்பதால் அபாயம் நேர்ந்துவிடும் என்று கூறுவது ஒன்று கலப்பற்ற பொய்; அல்லது காரணமில் லாத பயம் என்பதைத் தவிர வேறில்லை.

பிரிந்தால் வாழுமா?

தமிழகமோ அல்லது ஆந்திர கன்னட நாடுகளோ தனியரசு பெற்ருல், பிற மாகாணங்களின் தயவின்றி தனித்து வாழும் தகுதி பெற்றிருக்கிறதா என்று

(38-ம் பக்கம் பார்க்க)

பாட்டாளி பாரதியின் பாதிக்கறு!

(கு. மா. பாலசுப்பிரமணியர்)

★

செந்தமிழென்னும் பெருங்கடல்—தனிற்
சிப்பி நிகர்த்தவன் பாரதி—அவன்
சிந்தனைப் பாக்கள் அனைத்துமே—ஒளி
செய்து நகைத்திடும் முத்துகள்!—வானம்
சிந்தும் மழைத்துளி சிப்பியின்—அகம்
சேர்ந்தே உணர்வைக் கிளத்தலால்—அதன்
உந்தியில் வண்மை திரண்டதே—யொரு
ஒப்பற்ற முத்தென மாறுமாம்.

நொந்த மனத்துடன் பாரதி—உளம்
நாடும் விடுதலை வேட்கையால்—தினம்
சிந்தை குமைந்தக் கருத்தெலாம்—மிகச்
சீர்பெருங் காவியமானதே!
சிப்பிமறைந்தது மண்ணிலே—முத்தின்
சீர்த்தி யுயர்ந்தது விண்ணிலே—மன
ஒப்புடன் முத்தினைச் சூடுவோர்—அதன்
ஒட்டினைப் பேணுதல் இல்லையே!

நாட்டோரனைவரும் வாழவே—முழு
நாளும் உழைத்து மடிந்திடும் ஏழைப்
பாட்டாளரின் துயர்போலவே—தமிழ்ப்
பாட்டாளி பாரதி வாழ்வுமாம்!—ஊது
வத்தி எரிந்திட்ட பின்னரும்—அதன்
வாடை கமழ்வதைப் போலவே—அவன்
செத்து மடிந்திட்ட பின்னரும்—மக்கள்
சிந்தையில் பாடலாய் வாழ்கிறான்!

காலம் கவிஞனைத் தின்றது—அவன்
காவியம் காலத்தை வென்றது!—கடல்
ஓலமும் பாரதி பாடலை—இன்று
ஓதிமுழக்கிடக் கேட்கிறோம்.

பாலரும் மாதரும் பாடுறார்—வெறும்
பாவனைக் காரரும் ஆடுறார்—முன்பு
கேலி வசைகளைப் பேசினோர்—புகழ்
மாலைகள் சூடிக் கொண்டாடுறார்—சாதி
வாதுக் கெதிர்கட்சி யாடினோர்—இன்று
வக்கணையாய்த் துதி பேசினால்—பயன்
ஏதும் இராதெனச் சாற்றுவோம்—கவி
எண்ணங்களைச் செயலாற்றுவோம்!

பாரதியின் புகழ்பாடுவோம்—அந்தப்
பாவலன் நாளைக் கொண்டாடுவோம் !—இந்தச்
சீருடன் மெய் மயங்காமலே—அவன்
ஜீவிய லட்சியம் நாடுவோம் !

கன்னித் தமிழ்வாழ வேண்டும்—தலை
காட்டும் பிறமொழி ஆதிக்கமெல்லாம்
பின்னடைந்தோடிடல் வேண்டும்—இங்கு
பேசும் மொழியே அரசாள வேண்டும்.

மின்னும் தமிழ்க்கொடி வானில்—வெற்றி
வீசிடச் செய்யும் தமிழர சோச்சி
தன்னுரிமைப்படி நாட்டில் —நீதிச்
சட்டங்கள் யாவும் வகுத்திடல் வேண்டும்.

இந்த நிலை நமக்கெய்தால்—இங்கு
ஏழ்மையும் சாதியின் பேதமும் மாயும் !
செந்தமிழ் நாட்டினர் வீரர்—எனச்
செப்பும் மொழியுண்மையாகவும் வாழும்.

ஏழைப்படிமை யொருவனும்—இங்கு
இல்லையென்றே கவி பாடினன்—அந்தப்
பீழை தொலைந்திடவில்லையே—இன்று
பேசும் சுதந்திர நாட்டினும் !
நல்லதோர் வீணையைச் செய்துமே—மண்ணில்
நாசப்படுத்தி எறிவதோ—என
வல்லமை வேண்டினன் பாரதி—மக்கள்
வாழ்வு செழித்திடச் செய்யவே !

கோடி விஞ்ஞானிகள் கூடினும்—செய்யக்
கூடாத வீணையாம் மானிடர்—பலர்
நாடி நரம்பும் தளர்ந்துமே—தெருக்
கோடியில் வீழ்வதைக் காணீரோ ?—ஜீவ
வீணையின் நாதம் ஒலிக்குது—அதில்
வேதனைக்கீதம் தொனிக்குது !—இதைக்
காணவும் நெஞ்சம் சகித்திடும்—மனக்
கல்லர்கள் இன்னமும் வாழ்வதோ ?

பாட்டாளர் ஏழ்மையில் மாள்கிறார்—சற்றும்
பாடுபடாதவர் வாழ்கிறார் !—செவி
கேட்டாலும் உள்ளம் கொதித்திடும்—இந்தக்
கேவலத் தன்மையை நீக்குவோம் !

பாவலனின் புகழ்பாடுவோம்—தமிழ்ப்
பாரதி நாளைக் கொண்டாடுவோம்—அவன்
ஆவல் கன்விலோர் பாதியும்—நன
வாகிடவே வழி தேடுவோம் !

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பொய்க்கரி போகன்மின்
பொருண்மொழி நீங்கன்
மின்
அறவோ ரவைக்களம்
அகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம்
பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின்
பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின்
அல்லவை கடிமின்
கள்ளுங் களவுங்
காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும்
விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும்
யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது
ஒல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக்
குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து
வாழ்வீர்.........

என வரும் முடிவுரைக் கருத்தும் சமண சமய நெறிகளைப் போதிப்பதாக சிலர் நம்புகின்றனர். இளங்கோ, சமணத் துறவியென்பதற்கு இந்த நம்பிக்கையையும் சாதமாகக் காட்டுகின்றனர். ஆனல், சிலப்பதிகார முடிவுரையை வரிக்குவரி கருத்தூன்றிப் படித்தால், அஃது திருக்குறளின் சாரமேயன்றி வேறல்ல என்பது புலப்படும்.

இதுவரை நாம் கூறியவற்றைக் கொண்டு கவனித்தால் சிலம்பு காட்டும் செந்நெறிகளுள் துறவு நெறியும் ஒன்றென்று துணிவதற்கில்லை.

(35-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்கின்றனர் சிலர். தமிழரசுக் கழகத்தார் கோருவது, இந்தியாவின் இதர பகுதிகளோடு உறவு கொள்ளும் தமிழரசே அன்றி வேங்கடத்தின் எல்லைக்கு வேலி கட்டி வாழும் தமிழரசு அன்று. அப்படியே, ஆந்திர - கன்னட -- கேரள தேசிய இனங்கள் கோரும் தனி நாடுகளும் இந்திய சமஷ்டியில் இணைந்திருப்பனவே அன்றி, பிரிந்து நிற்பன அல்ல. எனவே, "பிரிந்தால் வாழ முடியுமா?" என்ற கேள்வி, பிரிவினைக்கு முட்டுக்கட்டையிட எழுந்ததேயன்றி, ஐயத்தாலோ அல்லது அரசியல்ஞானத்தாலோ எழுந்ததன்று.

மேலிடத்து ஆட்சியாளர் பிரிவினையை மறுக்கவும் மனமின்றி நடத்தவும் துணிவின்றி காலம் கடத்துகின்றனர். "இன்றை என்பதும் நாளை என்பதும் இல்லை என்பதற்கு அர்த்தமாம்" என்பது தமிழகத்துப் பழமொழி. இதுபோன்று மேலிடத்துத் தலைவர்கள் நாட்டுப் பிரிவினையை 'இன்று, நாளை' என்று தள்ளிப் போட்டு வருவதெல்லாம், 'இல்லை' என்று சொல்வதற்கான நாளை எதிர்பார்த்துத்தானே என்றும் ஐயுற வேண்டியிருக்கிறது. நமது ஐயம் பொய்யாகி, தமிழ் அரசு விரைவில் அமையுமாக !

வீரக்கனல்

தமிழரசுக் கழகத் தலைவர்

திரு. ம. பொ. சிவஞானம்

எழுதியது

அரசியல் கண்ணோட்டத்துடன்
ஆராய்ந்து எழுதப்பட்ட
அரிய நூல்

அச்சாகிக் கொண்டிருக்கிறது

விரைவில் வெளிவரும்

செய்திகள் ★ ★

தமிழர் கழகம்

சித்தூர் ஜில்லா, ஆற்காடு குப்பம் தமிழர் கழகத்தினரால் 13-8-50-ல் ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடைபெற்றன. திரு. ரஷீத் கூட்டத்திற்குத் தலைமை தாங்க, திருவாளர்கள் நன்னன், இரா. ஆடலரசு, கூ. மு. பதுமநாபன் ஆகியோர் சித்தூர் ஜில்லா பள்ளிகளில் சென்னை அரசினரின் ஆணைப்படி தமிழ் வகுப்புகள் துவக்கப்படாமலிருப்பதைக் கண்டித்துப், ஆசிரியர்களாக இருந்து வந்த இரு தமிழர்களைத் தக்க காரணமின்றி வேற்றூர்களுக்கு மாற்றியதை ஆட்சேபித்தும் பேசினர் இதையொட்டி தீர்மானங்கள் நிறைவேற்றி சென்னை அரசினருக்கு அனுப்பினர்.

தி. த. காங்கிரஸ்

திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் பொதுக் கமிட்டியின் கூட்டம் இடலக்குடியில் ஆக. 6-ல் கூடியது. தி. த. காங்கிரஸ் தலைவர் நதானியலும், கேரள யூனியன் பிரதமர் டி. கே. நாராயணப் பிள்ளையும் பாளையங் கோட்டையில் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அங்கீகரிக்க வேண்டுமென்ற தீர்மானம் கடுமையான விவாதத்திற்குப் பிறகு நிராகரிக்கப்பட்டது.

சுவாமிநாதன் - கமலாம்பாள் திருமணம்

சென்னை இன்ப நிலைய உரிமையாளர் திரு. சோம. சுவாமிநாதனுக்கும், திருமதி. கமலாம்பாளுக்கும் 31—8—50-ல் தேவகோட்டையில் திருமணம் நடைபெற்றது. டாக்டர் மு. வ., திரு. ம. பொ சி. முதலிய பலர் மணமக்களை வாழ்த்திச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

பதிவுத் திருமணம்

ஆகஸ்டு 25-ல் தஞ்சையில், **கோவிந்தராசுக்கும், சரோஜினிக்கும்** பதிவுத் திருமணம் நடைபெற்றது. திருவாளர்கள் சா. கணேசன், ம. பொ. சி., மதியழகன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர்.

வீரர்கள் மலர்

அக்டோபர் 2-ல் காந்தியடிகள் பிறந்த நாளும், 16-ல் வீரபாண்டியக் கட்டபொம்மன் தூக்கில் மாண்ட நாளும் வருகின்றன. இந்த இருபெரும் வீரத் தியாகிகளின் நினைவு மலராக அடுத்த 'முரசு' கூடுதலான பக்கங்களுடன் வெளிவரும். விலை 4 அணாதான்.

ஏஜெண்டுகள், தேவையான அதிகப் பிரதிகளுக்கு இம்மாதம் 15-ந் தேதிக்குள் எழுத வேண்டுகிறோம்.

உரிமையாளர்

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிட்டவரும்: **ம. பொ. சிவஞானம்**, கண்ணகி அச்சகம், 1/29 இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

பதிவு எண் M. 'TAMIL MURASU'